31

[illegible]

[illegible]

313

313

வைத்தியம்.

எழுதப்பட்டது: பி. எஸ். ராகவேந்திர ராவ்.

அட்டவணை

நீர் அட்டை என்றும் குளவட்டையின் குணமும் மருந்தும்

சுண்ணாம்புத் தண்ணீரின் குணமும் மருந்தும்

ஜீரம் வைசூரி இவைகளின் குணமும் மருந்தும்

நேர்வாளப் பருப்பு காட்டாமணக்கு இவைகளின் குணமும் மருந்தும்

குரிஞ்சா வேர் என்னும் நாட்டு அதிமதுரத்தின் குணமும் மருந்தும்.

மாங்கொட்டையின் குணம்

வேப்பன் பட்டையின் குணமும் மருந்தும்

வேப்பிலை போல்ட்டிஸ்

கடுகு போல்ட்டிஸ்

வாந்தி பேதி குன்மம் வாய்வு இவைகளின் குணமும் மருந்தும்

பல்வலி, முகவலி இவைகளுக்கு மருந்து

வாதம், திமிர் வாதம் இவை முதலியவைகளின் குணமும் மருந்தும்

கடுக்காயின் குணமும் முறையும் காசுக்கட்டி; வெடியுப்பு இவைகளின் குணமும் முறையும்

ஜீர குணமும் மருந்தும்

மேக வெள்ளை சொரி கரிப்பான் இவைகளுக்கு மருந்து

சுவாச காசம் வாதம் முதலிய வற்றிற்கும் அபின் இதுகளின் குணமும் முறையும்

பப்பாளிப் பால், ஆனை நெருஞ்சி இவற்றின் குணமும் மருந்தும்

நல்ல மிளகு குணமும் மருந்தும்

படர் தாமரைக்கு மருந்து

மேக வெள்ளைக்கு மருந்து

கொடிவேலி, மாதளை இவற்றின் குணமும் அது உபயோகிக்கும் முறையும்

அரிசியை மருந்தாகக் கொடுக்கும் முறை

நவாச்சாரத்தின் குணமும் முறையும்

ஸ்கோல் விஷரயின் குணமும் முறையும்

கெந்தகத்தின் குணமும் முறையும்

கள்ளுப் போலட்டிஸ்

வங்காளப் பச்சையின் குணமும் முறையும்

துரிசு குணமும் முறையும்

அபின் ஊமத்து எட்டி கொட்டை மற்றும் மயக்கத் தக்கவைகளின் குணமும் மருந்தும்

அன்ன பேதியின் குணமும் முறையும்

தண்ணீரின் குணம்

பக்கர் பிளவையின் குணமும் மருந்தும்

வைசூரி, சிச்சிலுப்பை, சிறவை சூரி முதலிய வெடிக்கும் சுரங்களுக்கு மருந்து

தொண்டை புண்களுக்கு மருந்து முறை

மெழுகு பிளாஸ்திரி

சவ்வரிசியின் குணம்

கோழிக் குஞ்சு, ஆட்டிறைச்சி இதுகளின் சாற்றின் குணம்

விப்புருதி

சுவாச காசத்தின் குணமும் மருந்தும்

ஆமணக்கெண்ணெய் குணம், மூக்கினின்று உண்டாகும் இரத்தப் பாசனத்தின் குணமும் மருந்தும்

சிரமமில்லாத மலப் போக்குக்கு மருந்து

அரையாப்புக் கட்டிகளுக்கு மருந்து

தீபட்ட புண்களுக்கு மருந்து

குழந்தைகளின் பலபந்தம் பிரசவம் குழந்தைகளின் வெளிரி சன்னி வலி

குழந்தைகளின் இருமல் குழந்தைகளின் வயிற்று வலி குழந்தைகளின் வயிற்றுக் கழிச்சல் வாந்தி பேதி இவைகளுக்கு மருந்து

ஆனைக்கால் கண் வலி இவைகளுக்கு மருந்து

ஜுரங்களின் முறையும் மருந்தும்

ஜன்னி வலிக்கு மருந்து

விசை நரம்பிலுண்டாகும் வீக்கங்கள் மேக வெள்ளை

கினி வோர்ம்ஸ் என்னும் தோலினுள் உண்டாகும் ஓர் வித புழு

நெஞ்செரிவு, கக்கிருமல், அஜீரணம் இவைகளுக்கு மருந்து

முட்டு வீக்கங்கள் பிரசவ வேதனை இவைகளின் குணமும் மருந்தும்

குட்டம் இடுப்பு வலி சிச்சிலுப்பை முறை தப்பான சூதகம் இவைகளுக்கு மருந்து

முலைக் காம்பில் புண்ணுக்கு மருந்து

மூல முளை துன்மாமிசம், வாதம் இவற்றின் குணமும் மருந்தும்

படர் தாமரை பொடுகு இவற்றிற்கு மருந்து

சுளுக்கு மேகவியாதி இவைகளுக்கு மருந்து

தொண்டைப் புண், பல்வலி இவற்றிற்கு மருந்து.

*****

சு.ச:30.1.63.

வைத்திய அட்டவணை.

எழுதப்பட்டது :- பி. எஸ். ராகவேந்திர ராவ்.

நீர் அட்டை என்னும் குண அட்டை :-

அட்டைகளைத் தகுந்த வியாதிகளுக்குத் தக்க சமயம் பார்த்து முறையாய் விடுகில் அனேக வியாதிகளுக்கு உபயோகமாயிருக்கும். அவை அவைகளை விடுகிறதில் ஜாக்கிரதை அவசியமானதாக இருக்கிறது. அவைகளை கடிக்க பண்ணுகிறதற்கு இரண்டு மாதிரியுண்டு. முதலாவது ஒவ்வொரு அட்டையாக கையில் பிடித்து வேண்டியது கையளவும் கடிக்க ~~பண்ணுகிறதற்கு இரண்டு * மணி~~*விடவும். இது மிகுந்த சலிப்பும் தாமதமுடன் திடமற்ற நலமாரி எப்படி என்றால் தேவையான அட்டைகளை ஒரு கிளாஸ் பாத்திரத்திலாவது கோப்பையிலாவது இட்டு கடிக்க வேண்டிய ஸ்தலனத்தில் தப்பாமல் விடவும். அட்டையை விட் கவுத்தி பிடித்திருக்கவும். சற்று நேரஞ் சென்ற பின் அதை நீக்கினால் அட்டைகள் கடித்துக் கொண்டிருக்கிறதைக் காணலாம். கிளாஸ் பாத்திரமாவது கோப்பையாவது ஆஜால்லாவிட்டால் முதன் சொன்னபடி ஒவ்வொரு அட்டையாய் கையில் பிடித்து கடிக்க வேண்டிய ஸ்தலம் தப்பாமல் விடவும். அட்டையை விட வேண்டிய பக்கத்தில் சவுக்காரத்தைத் தேய்த்து சுடு தண்ணீரால் நன்றாய்க் கழுவி துடைத்து பின்பு விடுகில் உடனே கடிக்கும். இப்படி செய்தும் உடனே கடியாவிட்டால் 15 அல்லது 20 மினிட்டு நேரம் உலர்ந்த அழுக்கில்லாத சீலையிலிட்டு மேலுள்ள இரத்தத்தை போக்கினதின் பின்பு விடவும். இதிலும் கடியாவிட்டால் தோலின் மேல் பாலைத் தடவியும் அதின் பின்னும் கடியாவிட்டால் தோலின் மேல் கொஞ்சம் கீரி அதிலிருநது வரும் இரத்தத்தை கடிக்க வேண்டிய ஸ்தல முழுதும் பூசியும் விட்டால் கடிக்கும். எந்த விதங்களிலும் கடியாமலிருக்கினும் கட்சி பிரயோகத்தால் நிச்சயமாய்க் கடிக்கும். அட்டைகள் இரத்தங் குடித்து யரு அல்லது உப நிமிஷம் கழித்த பின்பு விழா விட்டாலும் வேண்டிய போது அவைகளை நீக்கி விட வேண்டுமானாலும் கொஞ்சம் உப்பைத் தூவவாவது காடியை விடவாவது செய்தால் உடனே விழும். அட்டை கடித்த முறிவில் நின்று இரத்தம் போனது போரா திருந்தால் சுடு தண்ணீரால் ஒற்றிடம் கொடுக்கவும். இரத்தம் மிகுதியாய் போவதை நிறுத்த வேண்டுமானால் முறிவின் மேல் விரலா லமுத்து அட்டவணையில் சொல்லி இருக்கிற படி படிக்காரத் தூளையாவது தருசின் தூளையாவது வைக்கவும். அட்டைகள் மூலத் துவாரம் மூக்கின் துவாரம் மற்றெந்த துவாரத்தினுள்ளவாது ஏறி விட்டால் உப்புத் தண்ணீரிலாவது காடியாவது உளுக்குச் செலுத்த உடனே விழும். முககியமாய்க் கழுத்தில் பொருமிக் காணும். நரம்பின் மேல் அட்டை விடக் கூடாது. வலியுள்ள கட்டிகளின் மேல்விரலை வைக்கும் போது நாடியடிக்குமானால் அதின் மேல் அட்டைகளை விடாமல் அவற்றின் சுற்றில் சற்று தூரம் தள்ளி விடவும். கண்ணிமைகளிலாவது ஸ்திரிகளின் ஸ்தன்னியத்திலாவது ஆண் குறித் தோலியின் மேலாவது பீசத்தின் மேலாவது அட்டைகளை விடவும். சில சமயத்தில் எரி பந்தம் உண்டாகு மாதலால் அந்த ஸ்தலத்தில் விடக் கூடாது. குழந்தைகளுக்கு அட்டைகளை விட்டால் பிராயமானவர்களை பார்க்கினும் மிகுதியாய் இரத்தம் போகும். ஆனதால் மிகுந்த பத்திரம் வேண்டியிருக்கிறது. எப்பொழுது அட்டைகளை திரேகத்தில் எலும்புகளில் கூடிய மட்டும் மாமிசம் குறைந்து எலும்பு மேற்பட்டிருககிறதோல் அந்த ஸ்தலங்களை பார்த்து விடவும். இப்படி செய்கிறது ஒரு வேளை இரத்தம் விடாமல் பாயுமாகில் அன்று நிறுத்தும் பொருட்டு அமுத்திப் பிடிக்கிறதற்கு இசைவாயிருக்கும். எப்பொழுதும் குழந்தைகளுக்கு காலையில் அட்டை விடவும். சூரிய அஸ்தமித்த பின்பானால் ராத்திரி எல்லோரும் தூங்கும் சமயத்தில் கடிவாயில் நின்று அதிகமாக இரத்தம் பாய்ந்து குழந்தைகள் மறிக்கிறதற்கு ஏதுவாயிருக்கும். குழந்தைகளின் வயதுக்குத் தக்க அட்டையின் எண்ணம் நிதானிக்க அவசியமானதால் கீழ் எழுதியபடி செய்யவும்.

ஆறு மாதத்திற்கு கீழ்ப் பட்ட குழந்தைகளுக்கு அட்டைகளை மிகுந்த பிரயோஜனமாயிருக்கின்றன. வியாதியின் துவக்கத்திற காணி யானி வாலிபனுயும் பலவானுயு மிகுப் பானகில் நெற்றியின் இரண்டு பொட்டுகளின் ஒவ்வொன்றில் 4 அல்லது 6 அட்டை விடவும். பிடரியின் மேற் பக்கத்திலும் கடிக்க விட்டால் அதிக குணம் கொடுக்கும். சுரத்துடனே மார்பிலும் வயிற்றிலும் கடினமான வலிகளுக்கு அ அல்லது ய அட்டை உடனே வலியின் மேல் விடவும்.

மூல முளையின் இரத்தப் போக்கு நின்ற காரணத்தால் வரும் தலை இடிக்கு மூலத் துவாரத்தின் அருகே அட்டையை கடிக்கப் பண்ணிறல் குணப்படும். அட்டைகள் மூலத் துவாரத்துக்குள் ஏறிப் போயிவிட்டால் எச்சரிக்கையா யிருக்கவும். சூதகம் சடுதியாய் காரணத்தால் உண்டாகும் நோவுக்கு அட்டைகளை உள்த் தொடையில் விடவும்.

விப்புருதிகள், பருக்கள், அரையாப்புகள், நசிவுகள், சுருக்குகள் அமுகள் மட்டும் பட்டும் தோல் மேல் வரும் இரத்த சுரப்புகள் இவைகளின் ஆரம்பத்தில் வலியும் சூடும் அதிகமாயிருக்கும் பொழுது அல்லது அதி அட்ண்ட விட்டு சுடு தண்ணீரால் ஒற்றிடம் கொடுத் தால் வலி தீர்ந்து வியாதியை போக்கும்.

அரையாப்புகளுக்கு முக்கியமாய் அதிக வேதனை இருக்கிற பொழுது பிரயோசனமாம்.

கக்கிருமல் தொடங்கின் பொழுது பிடரியின் மேற் பக்கத்தில் அட்டை விட்டால் மிகுந்த பலனுயிருக்கும். செய்ய வேண்டிய முறை எப்படி யெனில் குழந்தைகளின் வயது ஒன்றுக்கு ஒவ்வொரு அட்டை வீதம் முறையாய்க் கூட்டி ௬ வயது வரை விடலாம். அப்புறம் எத்தனை வயதாயிருக்கினும் ௬ அட்டையே போதுமானதாயிருக்கிறது. ஆனதால் இப்படி விட்டு அட்டைகள் விழுந்த பின் ஒரு கடுகு பேரல் டிசாவது ஒரு சின்ன பிளிஸ்டராவது செய்து கழுத்தை விட்டு விட்டு இரண்டு தோள் பட்டைக்கும் நடுவில் வைத்துக் கட்டவும். அட்டைகளையும் கடுகு போலட்டிசிசையும் மறுபடியும் அவசியம் பேரல் இட்டுக் கொள்ளவும்.

அனேக வித கண்ணோய்களுக்கு அதிக சூட்டும் வலியும், வீக்கமும், சிகப்பு இருக்கிற பொழுது அல்லது ௬ அட்டைகளை கடைக் கண்களின் அருகே யிருக்கும் பொட்டுகளில் விட்டால் பலனைக் கொடுக்கும்.

சுண்ணாம்புத் தண்ணீரில் புதியதாய் நீற்றின அரை ராத்தல் சுண்ணாம்பில் ௬ புட்டி தண்ணீர் கொஞ்சம், கொஞ்சமாய் விட்டு சுண்ணாம்பு முழுவதும் அடியில் உரைந்து ஜலம் தெளியு மட்டும் வைத்திருக்கவும். அவசரமாய் வேண்டி யிருந்தால் அரைமணி நேரம் வைத்திருந்தால் போதும். அநேக விதங்களில் இந்த ஔஷதம் மிகுதியாய் உபயோகப் படுவதால் எப்பொழுதும் முன்னதாக செய்து வைத்திருக்கவும். இதை காற்று போகா மல் இருக்கும்படியாக அடைபுள்ள குப்பிகளில் விட்டு வைத்திருக்கில் கேடில்லாமல் வெகு நாளிருக்கும். ஔஷததிற்கு தெளிந்த ஜல மாத்திரம் எடுக்கப்படும்.

குலை எரிவுக்கும் இரைக் குடல் புளிக்கும், புளித் தேப்பங் கூடிய அஜீரணத் துக்கும் வாந்திக்கும் உஷ்ணத்தாலுண்டாகும் மஞ்சள் நிற மூத்திரத்துக்கும் இந்த ஜலத்தில் ஒரு வேளைக்கு .கஇ, அல்லது .உ சேரை சமனளவு பால் கொடுக்கலாம். இப்படி தினம் மூன்று தரம் கொடுக்கவும். சில நாள் கொடுத்த பின் வியாதியை மாற்றி குணத்தைக் கொடுக்கும். மேற்சொன்ன வியாதிகளுடன் வரும் வயிற்றுப் போக்குக்கும் விளாம் பிசின் தண்ணீரில் மேற்படி ஜலத்தில் சேர்த்து அரை அரிசியிடை அபின் கூட்டிக் கொடுக்க அதிக பலன் தரும். இந்தப் பிரயோகம் சில மாதரி வயிற்றுக் கடுப்புக்கும் உபயோகப்படும். குழந்தைகளின் வயிற்றுப் போக்குக்கும் மற்ற ஔஷதங்கள் கொடுப் பது மன்றி மேற்படி சுண்ணாம்புத் தண்ணீர் ஒரு தேக்கரண்டி வீதம் கொஞ்சம் பாலில் தினம் இரண்டு தரம் கொடுக்கவும்.

இலிங்கம் உபஸ்தம் இவைகளிலுண்டாகும் வருத்தமான எரிவுக்கு சுண்ணாம்புத் தண்ணீரை வெதப்பி தினம் .ங அல்லது .ச தரம் அதைக் கொண்டு நனைக்கில் நீங்கும். உபஸ்தத்தில் நின்று புறப்படும் மேக வெள்ளை முதலானவைகளுக்கு வலியுங் கூட உண்டா யிருக்கில் சுண்ணாம்புத் தண்ணீரை உள்ப் பீச்சினும் சாந்தப்படும்.

கண்டாமாலைக்கும் முக்கியமாய் விப்புருதிகளும், புண்களும் கூடிய கண்டா மாலைக் கும் சுண்ணாம்புத் தண்ணீரில் அரை சேரை வீதம் தினம் .ங, அல்லது ச தரம் இப்படி சில நாள் தொடர்ந்து கொடுக்கில் பலன் படும்.

நறு நன்றிக் கசாயத்தில் சேர்த்துக் கொடுக்கிறது. சில மேக வியாதிக்கு உபயோகப்படும் சலம் மிகுதியாய் வடி கண்ட மாலையின் புண்ணுகளுக்கும் மற்றும் பல மாதிரி புண்களுக்கும் மேற்கண்ட சலத்தை விட்டால் குணப்படுத்துகிறதுந் தவிர அதிக

அதிக நீர் வடியப் பட்டுத் தோல் மேல் வரும் ? அனேக வியாதிகளுக்கும் சுண்ணாம்புத் தண்ணீர் தனித்தாவது சமனளவு ஜலத்திற் கலக்கியாவது விட்டால் சவுக்கியப்படும்.

உப்புத் திராவகம் முதலியவைகளை நஞ்சாகக் குடித்திருக்கில் சுண்ணாம்புத் தண்ணீரை அதிகமாய் பாலில் சேர்த்துக் கொடுத்தால் ஜலமற்ற உப்புகளைப் போல் மிகுந்த காரமற்ற தாயினும் சாறமான மற்ற மருந்தா யிருக்கிறது பாஷாணத்தை நஞ்சாக தின்ற தற்கும் கொடுக்கலாம்.

நீரழிவுக்கு ஒரு வேளைக்கு உ சேரை சுண்ணாம்புத் தண்ணீரை பாலில் சேர்த்து தினம் இப்படி ங தரம் கொடுத்தால் அதிகமாகப் போகிற மூத்திரத்தை குறைக்கும். ராத்திரி படுக்கை சமயத்தில் அரை அரிசியிடை அபினும் கொடுக்கலாம்.

தீப்பட்ட புண்களுக்கு சுண்ணாம்பு தண்ணீரும் நல்லெண்ணெயும் சமன் அளவு எடுத்து இரண்டையும் ஒன்றாய்ச் சேரும்படியாய் நன்றாய்க் கலக்கி இதில் சீலையை நனைத்து விரணங்களில் குட்டு அடிக்கடி நனைக்கிறதும் தவிர சீலையையும் மாற்றி மாற்றி இடவும். இப்படி செய்வது நல்ல பிரயோகமாய் இருக்கிறது.

எலுமிச்சம் பழம்:- எலுமிச்சம் பழச் சாறு புதிதாயும், நல்லதாயும் இருக்கில் ஔஷதத்திற்கு உபயோகமாயதாய் இருக்கிறது. ஒருவித சொரி, கரப்பானுக்கு மேற்படி சாற்றில் ஒரு வேளைக்கு ங சேரை வீதம் தினம் இரண்டு தரம் கொடுக்கிறது. மன்றி வியாதிக்காரன் மிகுந்த பலவீனமாயிருக்கில் கிரியத்துக் குடிநீரிலாவது வேப்பம் பட்டை கசாயத்திலாவது சமனளவு எடுத்து மேல்படி சாற்றில் சேர்த்துக் கொடுக்கலாம். மேல்படி சாறு ஒரு பங்கும் தண்ணீர் அரை பங்கும் கலந்து வாயைக் கொப்பளித்தால் ஈரில் தோன்றும், ரணங்களுக்கும் மற்றும் வாயினுள் வரும் புண்களுக்கெல்லாம் நன்று. சிறைச்சாலை முதலிய ஜனக் கூட்ட முள்ள ஸ்தலங்களில் மேற்சொல்லிய சொரி கரப்பான் பிரவேசிக்கும் சமயத்தில் சவுக்கியமாய் இருக்கிறவர்களுக்கு இந்த வியாதி அணுகாமல் இருக்கும் பொருட்டாய் எலுமிச்சம் பழச் சாற்றை தப்பாமல் தொடர்ந்து கொடுக்கவும். இத்துடன் கொஞ்சம் பஞ்சதாரையும் சேர்த்துக் கொண்டால் அதிக பலன் கொடுக்கும். இதுவுந் தவிர வாசம் பண்ணும் ஸ்தலத்தை சுத்தமாய் மிகுதியாய் காற்று வரும்படியாய் ஈர மில்லாமலும் வைத்திருப்பதில் மிகுந்த கவனமும் சிறைச் சாலையிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் போஜனம் நல்லதாயும் ஜீரணமாகிறதாயும் செழிப்பாயும் செய்துக் கொள்ளுவதும் அவசியமாய் இருக்கிறது.

ஜீரம்:-

வைசூரி சிச்சிலுப்பை என்னும் சிறுவை சூரி முதலிய வியாதியுடைய வர்களுக்கு மிகுந்த தாகமும் மேல் வரட்சியும் சூடு இருக்கில் நாலைந்து எலுமிச்சம் பழத்தைத் துண்டு துண்டாய்க் கண்டித்து அரை புட்டி கொதிக்கிற தண்ணீரிலிட்டு ஆறினவுடனே வடிகட்டி .உ சேரை அல்லது தேவையான பஞ்ச தாரையை சேர்த்து வியாதிக்காரனின் இஷ்டம் போல் எவ்வளவாவது குடிக்கலாம். ஜீரன் உண்டாயிருக்கிற பொழுது வாயில் உமிழ் நீரில்லாமல் பிசு பிசுப்பாயிருப்பதற்கு ஒரு எலுமிச்சம் பழத்தை துண்டுகள் செய்து ஒவ்வொரு துண்டாய் தேவையான மட்டும் வாயிலிட்டு அதை சப்பிக் கொண்டிருக்கவும்.

நேர்வாளப் பருப்பு:-

காட்டாமணக்கின் முத்து முதலியவை நஞ்சாக தின்றிருக்கினும் அகோரமாய் பேதியையும் வாந்தியையும் உண்டாக்கப் பட்ட செடி மரம் முதலானதைச் சார்ந்த உரப்பான நஞ்சுகளுக்கு எலுமிச்சம் பழச் சாற்றில் .ச அல்லது ரு சேரை எடுத்து அதற்குச் சமன் கஞ்சித் தண்ணீராவது சுத்த ஜலமாவது சேர்த்துக் குடிக்கில் உடனே குணத்தைக் கொடுக்கும். இந்த ஔஷதம் எப்பொழுதும் கிடைக்கப்படதாயும் சாதாரணமாய் எடுத்த வியாதிக்காரனை ஒரு அலுவலும் செய்ய வொட்டாமல் அமைதலாயும் கூடிய மட்டும் குளிச்சியாயும் வைத்திருக்க வேண்டும்.

குரிஞ்சா வேர் என்னும் நாட்டு அதிமதுரம் வித்துச் சிகப்பு நிறமும் ஒரு சுற்றத்தில் குறுத்த பொட்டு உடையதாயிருக்கிற இந்தப் படர் செடியின் வேர் அதிமதுரத்தின் ருசியையும் மாதிரியையும் உடையதாயிருக்கின்றதால் நாட்டு அதிமதுரமென்று பெயரைப் பெற்றது. அது மருந்துக் கடுத்த குணங்களுடையதாயிருக்கின்றது. குழந்தைகளின் இருமலுக்கு புதிய மதுரமான வேரில் உ சேரை எடுத்து சதைத்து அரை புட்டி ஜலத்தில் அரைமணி நேரம் வரையில் வேக வைத்து வடி கட்டி இதில் எட்டு சேரை கற்கண்டாவது தேனாவது சேர்த்து மறுபடியும் அடுப்பில் வைத்து கட்டிப் பாகு பதம் ஆகிற வரையும் காய்ச்சவும். இதில் தேக்கரண்டி வீதம். ஜீரம் கூடியிருந்தாலும், இல்லாவிட்டாலும் தினம் பலதரமும் இருமல் வருகிற வேளைகளில் கொடுக்கவும். உடன் பறித்த இலையின் சாற்றை சிறு குழந்தைகளின் வாயினுள் வெள்ளை நிறமான புண்களுக்கு தொட்டு இட்டால் குணம் செய்யும்.

மாங்கொட்டை:-

மாங்கொட்டையின் பருப்பை உலர்த்தித் தூள் செய்து இருபது முதல் முப்பது வரை அரிசி யிடை வரையும் தேனில் அல்லது வெல்லத்தில் சேர்த்துக் கொடுத்தால் நாகப் பூச்சிகளை வெளியி லாக்க உபயோகப்படும். மூலத்தில் நின்று இரத்தம் போகிறதற்கும் மாதவிடை அதிகமாய்ப் போகிறதற்கும் கொடுக்க நிற்கும்.

வேப்பன் பட்டை:-

இது எப்பொழுதும் கடைகளில் நற் சரக்காய்க் கிடைக்கும். சில நாளாக இங்கே வைத்தியர்களில் குளிர் சுரம், முறைக் காச்சலுக்கு மிகுதியாய் வழக்கப்பட்டிருக்கின்றன. சுரம் விட்டிருக்கும் சமயத்தில் பட்டையின் தூளில் ஒரு வேளைக்கு வீசம் சேரை வீதமாவது இரண்டு சேரை பட்டையை ஒரு புட்டி தண்ணீரில் இட்டு அரை புட்டியாகக் குறுக்கி அதில் ஒரு நேரத்திற்கு இரண்டு சேரை வீதமாவது தினம் ஒன்றில் மூன்று தரம் கொடுக்கவும். சுரங்கள் வாசியான பின்னிருக்கும். பலவீனத்திற்கும் அக்கினி மந்தத்திற்கும் கூட இந்த மருந்து கசாயம் பொடியைப் பார்க்கிலும் நன்று அல்லாமலும் கொஞ்சம் கிராம்பாவது கறுவாய்ப் பட்டை கசாயத்தில் சேர்த்துக் கொண்டால் சாரம் அதிகமாக யிருக்கும்.

வேப்பிலை போல்டிஸ்:-

வேப்பிலையில் போல்டிஸ் செய்கிறது. ஊமத்திலை போல்டிஸ் எப்படி செய்கிறதோ அப்படி செய்துக் கொள்ளவும். இது மற்றொரு மருந்திலும் ஆறு புண்களுக்கு நல்லதாய் இருக்கிறது.

கடுகு போல்ட்டிஸ்:-

அசதி சன்னிக்கும். சன்னி இழுப்புக்கும், பைத்தியப் புலம்பலுக்கும், தூங்குவது போல் போதமற்றுக் கிடக்கிறதற்கும், சுரத்துடனாவது வைசூரியுடனாவது உண்டாகும். அகோர மான தலை நோவுக்கும். இந்த கடுகு போல்ட்டிசை உள்ளங் கால்களிலும், கால்களின் கெண்டைச் சதையிலும் வைத்துக் கட்டினால் சிரசு நோவை உடனே மாற்றும்.

வாந்தி பேதி குன்மம், வாயுவு சூடல் இவைகள் சுரமில்லாதிருக்கில் கடுகு போல்ட்டிஸ் காரமாய் செய்து பத்து அல்லது பதினைந்து நிமிஷம் நேரம் வரையும் வயற்றின் மேல் முழுவதும் வைத்துக் கட்டினால் அதிக குணந் தரும். வாந்தி நிற்கிறதற்கும் நன்று, வாந்தி பேதி யுடையவன் முற்றும் பலவீனனாயிருந்தால் இந்த போல்ட்டிசை இருதய ஸ்தான மார்பின் இடது பக்கத்தில் வைத்துக் கட்டவும்.

குழந்தைகளுக்கும் பிரயமானவர்களுக்கும் சுவாச முட்டுதலுடன் இருக்கும் இருமல் களுக்கும் மார்பில் கட்டவும். கக்கிருமலுக்கு முதுகில் இருக்கு குருதோன் பட்டைக்கும் மத்தி யிலே இட்டால் தீரும்.

பல்வலி, முகவலி, தலையிலும், முகத்திலும் நரம்பு இவைக்கு கடுகு போலிட்டிசை வலியின் பேரில் இட்டால் மிகுந்த குணத்தைக் கொடுக்கும்.

வாதத்துக்கு வலி மேலும் திமிர் வாதத்திற்கு முதுகு எலும்பின் மேலும் இடவும் தீரும். திமிர் வாதத்திற்கு உள்ளுக்கும் ஒரு நேரத்துக்கும் தினம் கடுகு வீதம் முழுமையாய் தினம் இரண்டு மூன்று தரம் கொடுத்து திமிருள்ள பக்கத்தில் இழுப்புக் காண்கில் உடனே நிறுத்திப் போடவும்.

<u>கடுக்காய்:-</u>

பேதி ஔஷதங்களுக்கு இசைந்த தாக வொன்றும் கிடையாத சமயத்தில் கடையில் அகப்படும். கடுக்காய் உபயோகப் படுத்தும். அதை.க் கீழ்ச் சொல்லியபடி கசாயஞ் செய்து கொடுக்கலாம். சாதாரணம். பருத்தில்க் கடுக்காய் கருவாய் அல்லது கிராம்பு திரும்.க இவை இரண்டையும் சதைத்து நாலு அரிசியிடை தண்ணீரிலிட்டு பத்து நிமிஷ நேரம் வேக வைத்து வடிகட்டி ஆற்றி அவ்வளவும் ஒரு தரமாகவும் குடிக்கவும். இவ்வளவும் இத்தேசத்தில் பிராயமானவனுக்குக் கொடுத்தால் வாந்தியும் வயிற்று வலியும் இல்லாமல் சாதாரணமாய் மூன்று நான்கு தரம் நன்றாய்ப் பேதியாகும். சிலர் இந்த கசாயத்தில் சலத்துக்கு பதில் பாலை நலமென்று சேர்த்துக் கொள்ளுவார்கள். எது காரணங்களிலாவது உண்டாகும் மல பந்தத்துக்கு பிரயோகிக்கலாம். குழந்தைகளுக்கு. மேற் சொல்லிய அளவில் கொஞ்சம் குறைத்தாவது பாதியாவது கொடுக்கலாம்.

கடுக்காயும், காசுக் கட்டியும் நேரமையாய்ப் பொடித்து சமனிடை எடுத்து பிசின் பருவம் வரத் தக்கதாய் நெய் அல்லது வெண்ணெய் சேர்த்து அரைத்துத் துணியில் தடவி பழைய புண்களுக்கும் முறிவுகளுக்கும் மற்றும் சலம் மிகுதியாய் வடியும், அனேக தோல் மேல் வரும் வியாதிகளுக்கும் இட்டால் பலனைக் கொடுக்கும்.

<u>வெடியுப்பு:-</u>

இந்த ஔஷதத்திற்கு கடையில் வாங்கும் பொழுது புதியதாயும் நல்ல சரக்காயும் தெரிந்து எடுப்பதில் ஜாக்கிரதையாய் இருக்கவும். காற்றுப் பட்டு சிந்திருக்கப்பட்டது நல்லதல்ல.

சுரங்கள் எல்லாவற்றிலும் தோல் சூடாய் இரண்டு நாக்கு உலர்ந்து தாகம் அதிகரித்து மூத்திரம் குறைந்து சிகப்பு நிறமாயிருக்கும் பொழுது அரை அரிசியிடை வெடியுப்பை .உ புட்டி தெளிவான கஞ்சித் தண்ணீரில் கலக்கி இனிப்பிக்கத் தக்க கற்கண்டாவது தேனாவது கூட்டி போதுமான மட்டும் குடித்தால் ஜீரத்தைக் குறைத்து வேர்வை குறைத்து உண்டாக்கி மூத்திரத்தை அதிகமாய்ப் போகப் பண்ணும். இந்த மருந்தை ஒன்றிரண்டு தரம் கொடுத்து பின் மருந்து வாந்தியாய் விடும். என்றாலும் தொடர்ந்து குடிக்கவும். வியாதிக்காரனுக்கு மனம் உண்டாயிருக்கில் நற்சுவை கொடுக்க கொஞ்சம் புளியாவது எலுமிச்சம் பழச் சாறாவது சேர்த்துக் கொள்ளலாம். குழந்தைகளுக்கு மேற்சொல்லிய அளவுகளில் பாதியாவது அதிற் குறைந்தாவது செய்து கொடுக்கவும்.

சுரங்கள் உண்டாயிருக்கும் பொழுது பைத்திய புலம்பலாவது தலை நோவாவது அதிகமாய் உண்டாயிருக்கில் வெடியுப்பும் நவச்சாரமும் வகைக்கு.க ஒரு அரிசியிடை எடுத்து ஒரு புட்டி தண்ணீரில் கலக்கி துணியை அதில் நனைத்து நனைத்து தலையின் மேலிட்டு இந்தப் பிரகாரம் அடிக்கடி துணியை நனைத்து மாறி மாறி இடவும்.

நுரையீரல், இரைகுடல், மற்றெந்த உள்ளுறுப்புகளிலாவது நின்று சுரம் கூடியிருந்து இரத்தம் போனால் ஒரு வேளைக்கு எட்டு அல்லது பத்து வெடியுப்பு மூன்று வீசம் படி தண்ணீரில் கலக்கி இந்த விதம் தினம் நாலைந்து தரம் கொடுத்து வியாதிக்காரனை முற்றும் அமைதலாயும் குளிர்ச்சியாயும் வைத்திருக்க வேண்டும். வலி மிகுதியாயும் உறக்கமில்லாமலுமிருந்தால் மேற்படி வெடியுப்பு தனில் ஒரு வேளைக்கு அரை அரிசியிடை அபினை சேர்த்து தினம் மூன்று தரத்துக்கு அதிகம் கொடுக்கக் கூடாது.

<u>மேக வெள்ளைக்கு:-</u>

ஒரு திராம் வெடியுப்பை அரிசிக் கசாயம்.க புட்டியில் கலக்கி அடிக்கடி

செமிப்பாதியை குடித்தால் மூத்திரம் விழும் பொழுது இருக்கிறது. இருக்கிற வலியையும் சூட்டையும் நிறுத்தும். மேற்சொன்ன பிரகாரம் நீர்க் கோவைக்கு கொடுக்கில் மூத்திரத்தை அதிகமாய்ப் போக்கி சில சமயம் சவுக்கியப்படுத்தும். மேல் சூட்டிருக்கிற பொழுது கொடுத்தால் மிகுந்த குணமா யிருக்கும்.

ஒரு வித சொறி கரப்பானுக்கு:-

வெடியுப்பை.௧ திராம் வீதம் அதிக தண்ணீரில் கலக்கி காலையிலும் சாயந்திரமும் கொடுத்த காடியை பானமாகக் குடித்தால் சில சமயத்தில் மிகுந்த குணம் கொடுக்கிறதாயிருக்கும்.

சுவாச காசத்துக்கு:-

கீழ் சொல்லிய பிரயோகம் பலனுடையதாயிருக்கிறது. கொஞ்சம் தண்ணீரில் மிகுதியாய் வெடியுப்பை கரைத்து அதில் தடித்த கடுதாசியைத் தோய்த்து சில நிமிஷ நேரமான பின் காற்றில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். சுவாச காசம் துடங்குகிற போது வியாதிக்காரன் இருக்கும் அறையில் இந்தக் காகிதத்தை கொளுத்திட்டு அந்தப் புகையை உள்ளுக்கு சுவாசம் வாங்கவாவது மேற்படி கடுதாசியை புகையிலை சுங்கானில் வைத்து புகை குடிக்கவாவது செய்யவும். இதின் புகையை நன்றாய் சுவாசம் வாங்கிலல் வியாதியை தீர வாசியாக்காமல் போனாலும் தற்சமய மிகுந்த குணத்தைக் கொடுக்கும். தொண்டைப் புண்களுக்கு ஒரு சிறு துண்டு வெடியப்பை வாயிலிட்டு மெல்ல மெல்ல கரையும்படி ஒதுக்கிக் கொண்டிருந்தால் பலனுண்டாம்.

வாதம் மேக வியாதியை சார்ந்திராமலும் ரசத்தில் ஔஷதம் தின்றதினல் உண்டானதாயுமிருந்தால் ஒரு வேளைக்கு முப்பது கிரயின் வெடியுப்பை கால்படி சுடு கஞ்சி தண்ணீரில் கலக்கி இந்த விதம் தினம் மூன்று தரம் கொடுக்கவும். இப்படி கொடுக்க ஆரம்பித்து சில நாளான பின் வெடியுப்பை சய முதல் அறுபது கிரெயின் வரை கூட்டி அது போல வேதனை நீரை அதிகரித்துக் கொள்ளலாம். இதற்குப் பின் எந்த ஔஷதம் கொடுத்த போதிலும் வலியும் (வீ) சாந்தப்படுத்தும்.

அபின்:-

இதைத் தகுதியாய்ப் பிரயோகித்தால் மிகுந்த உபயோகமான ஔஷத மாயிருக்கின்றது. ஆனல் அது மிகுந்த வல்லமையுள்ளதோ நிலையுடையதாயிருப்பதால் அதிக ஜாக்கிரதையாயும் பத்திரம் கொடுக்காவிட்டால் மிகுந்த பொல்லாங்கு செய்யும். கடைகளில் கிடைக்கப்பட்ட அபின் ஏறக் குறைய கலப்புச் சேர்ந்த தாயிருக்கும். இதின் அத்தாட்சி என்ன வென்றல் ஒரு கடையிலிருக்கும் அபினை ஒரு மனிதனுக்குத் தகுந்த இடை கொடுக்கில் தூக்கம் கொடுக்கும். அந்த எடையில் தான் மற்றொருவனுக்கு கடையில் உள்ளதை கொடுக்கில் சிலவேளை யாதொரு பலனும் காணமாட்டாது. ஆகையால் அதை சோதனை செய்வதிலும் கொடுப்பதிலும் மிகுந்த ஜாக்கிரதை வேண்டியிருக்கிறது. இதை உள்ளுக்குக் கொடுக்கும் பொழுது குளிரும். ஒரு காரியத்தில் பத்திரமாயிருக்க வேண்டுவது என்னவென்றால் சிலர் அபினை அதிகமாகத் தின்றாலும் யாதொன்று மாட்டாது. சிலர் எவ்வளவு அற்பமாய் அதை தின்னும் அதிக தலை நோவும் மற்றும் துற்குணங்களையும் உண்டாக்கும். அபினை குழந்தைகளுக்கு மிகுந்த அற்பமானதில் கொடுக்கிலும் மோசமுள்ளதால் மிகுதியான அவசியமிருந்தால் தான் கொடுக்க வேண்டும். சிறு குழந்தைகளுக்கு அதை சற்றும் கொடுக்கக் கூடாது. ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும். பிரமாணம் பிராயமான வர்களுக்கு சொல்லியிருக்கிற இடையில் .ய அல்லது யஉ.ல் ஒரு பங்கு வீதம் ஒரு தரந்துக் கொடுக்கலாம். வாதம், கட்டிகள், பிழவைகள், கருக்குழி நோய் முதலான பல வியாதிகளும் குட்டம் மேகம், கண்டமாலை இவற்றைச் சார்ந்து வரும் பெரிய புண்களும் வலியுண்டாய் நோயாளிக்கு முக்கியமாய் இரவில் உறக்கமில்லாமல் கஷ்டப்படுகிறதற்கு அபினை ஜாக்கிரதையுடனே கொடுக்கில் வலியை நீக்கி மிகுந்த குணத்தைக் கொடுக்கும். அபினைக் கொடுக்க ஆரம்பிக்கும் பொழுதும் ஒவ்வொரு வேளைக்கு கொஞ்சம் கொஞ்சமாய் கொடுக்கவும். பிராயமான ஒரு ஆளுக்கு முதலாவது ஒரு கிரெயின் அபினை மாத்திரை செய்து படுக்கப் போகிறதற்கு

ஒரு மணி நேரத்துக்கு முன் கொடுக்கவும். முதல் நாள் ராத்திரி கொடுத்த பின் தூக்க முண்டாகில் தினம் இரவில் கொடுக்கலாம். தூக்க முண்டாகாவிட்டால் மறநாள் ராத்திரி இரண்டு கிரெயின் அபினைக் கொடுக்கவும். அதிலும் உறக்கமில்லா விட்டால் அடுத்த ராத்திரி மூன்று கிரெயின்ஸ் கொடுக்கவும். சகசமாய் மேற் சொன்ன எடை போதுமானதாமானல் நாலு கிரெயின்ஸ்க்கு அதிகம் கொடுக்கவே கூடாது. கொடுக்க வேண்டிய அளவை இவ்விதமாய் நிதானித்துக் கொண்டு ராத்திரி தோரும் யாதொரு பயமில்லாமல் கொடுக்கலாம். வியாதிக்காரன் ஒன்றிரண்டு கிழமை வரை அபினை எந்த அளவாவதும் தின்ற பின் அதின் சத்தி குறைந்து காணுவதால் முன் கொடுத்த எடையில் அரைமுதல் ஒரு கிரெயின்ஸ் வரையில் அதிகம் கூட்டிக் கொள்ள வேண்டும். வியாதிக்காரன் வலி குறைந்து சவுக்கியப்படும் பொழுது அபின் கொடுப்பதை சடுதியில் தீர நிறுத்தாமல் ஒவ்வொரு வேளையில் ஒரு கிரெயின்ஸ் வீதம் கிரமமாய்க் குறைத்து அப்புறம்' விட்டு விடவும்.

கடினமான குன்மத்துக்கும், வயிற்று வலிக்கும் அபின் மிகுந்த குணத்தைக் கொடுக்கும் வியாதிக்காரன் பிராயமானவனும் வலி அதிக அகோரமாயும் இருக்கில் உடனே கடை அபினில் இரண்டு கிரெயின் சற்று சுக்கு நீரில் கலக்கி உள்ளுக்கு கொடுத்து அப்பொழுது வயிற்றின் மேல் சுடு தண்ணீர் ஒற்றனம் கொடுக்கவாவது கடுகு போலட்டிசை அகலமாய் பண்ணி கட்டவாவது செய்யவும். முதலாவது உள்ளுக்குக் கொடுத்த மருந்தினால் வலி நீங்காவிட்டால் அரை மணி நேரஞ் சென்ற பின் மறுபடியும் அந்த விதம் கொடுக்கலாம். பின்னும் வலி கடுமையாய் நிற்கில் ஒரு மணி நேரங் கழித்து திரும்பவும் கொடுக்கலாம். இப்படி மூன்று தரம் கொடுக்கிறது. வியாதிக்காரன் அளவற்ற வேதினையில் கஷ்டப்படும் பொழுது வலி தீர்ந்த பின் ஒரு பேதிக்கை ஆமணக்கெண்ணெய் கொடுக்கவும்.

<u>ஸ்திரிகள் பிரசபித்த பின் உண்டாகும் கடினமான வயிற்று வலிக்கு.</u> 28.1.63.

ஒரு கிரெயின் அபினை ஒரு சேரை சுடு கஞ்சியின் தண்ணீரில் கலக்கிக் கொடுக்கில் வலி தீரும். பிராயமானவற்களுக்கு உண்டாகும் வாந்தியை நிறுத்தும் பொருட்டு இதைச் சில சமயம் உபயோகப்படுத்தலாம். அபினை வெளிவிடுவதை அனேக வியாதிகளுக்கு உபயோகமாயிருக்கும்.

வாதம், சுளுக்கு, நசிவு, இடுப்பு வலி, கழுத்து முதலிய ஸ்தலங்களிலுள்ள விசை நரம்புகளிலுண்டாகும் கட்டிகள் பின்னும் திரேகத்தின் மேலுண்டாகும் எந்தப் பக்கங்களிலாவது வலிகளுண்டாயிருந்தால் கடை அபினை இரண்டு அவுன்ஸ் தேங்காய் எண்ணெயில் கலக்கி தினம் இரண்டு மூன்று தரம் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து நன்றாய் தேய்க்கவும். ஆனால் வலியுள்ள ஸ்தலத்தில் சூடாவது, புண்ணாவது முறிவாவது தோலுரிவாலாவது உண்டாயிருக்கில் மேற்படி தயிலத்தை இடக் கூடாது. தோலியில் யாதொரு வீரணமு மில்லாதிருந்தால் தான் இதைப் போடலாம். கக்கிருமலுக்கு அபின் தயிலத்தை முதுகெலும்பில் தினம் இரண்டு தரம் தேய்க்கப் பலனுண்டாம்.

சில கண் வியாதிகளில் கண்ணில் வலியும் வெளிச்சத்திற் பார்க்கும் பொழுது வலி அதிகமாயு மிருக்கிறதற்கு மூன்று கிரெயின் கடை அபினை ஒரு அவுன்ஸ் சுடு தண்ணீரில் கலக்கி ஒரு சிறு பார்த்திரத்திலிட்டு இதின் ஆவியை கண்ணில் பிடிக்கவும். அதிக குணம் கொடுக்கும்.

உளுத்த பல்லிலுண்டாகும் பல் வலிக்கு ஒரு கிரெயின் அபினை பற் குழியில் வைத்திருக்கில் உடனே தீரும். உமிழ் நீரை உள்ளுக்கு இறக்கக்கூடாது.

<u>காது சேவுக்கு:-</u>

க. கிரெயின் அபினை ஒரு திராம தேங்காய் எண்ணெயில் கலக்கி பஞ்சில் நனைத்து காதினுள் வைத்திருக்கவும். அதிக உள்ளுக் குத் துணிக்கக் கூடாது.

கடினமான கக்கிருமலுக்கு முதுகெலும்பின் மேல் அபின் தயிலத்தை தேய்த்தால் நன்மு.

வீக்கமும் சூடு மகுந்திருக்கப் பட்ட வலியுள்ள மூல வியாதிக்கு ஒரு பெரிய அரிசி போல் போல்டடிஸ் பண்ணி அதின் மேல் அபின் தயிலத்தை லேசாய் தடவி வைத்துக் கட்டவும்.

மூத்திரம் போகாமல் தடையா யிருக்கில் சுடு தண்ணீர் ஒற்றிடம் கொடுக்கிறது மன்றி இரண்டு கிரெயின் கடை அபினை நெய் விட்டு மெதுவாக்கி இதைப் பவன வாயினுள் விரலால்

செலுத்தி விரலின் இரண்டாம் முளி மட்டும் உள்ளுக்குத் தள்ளி வைத்தால் குணம் கொடுக்கும். சில வலியுள்ள கர்ப்ப வியாதிகளுக்கும் இந்தப் பிரகாரம் பவனத் துவாரத்திலுள் செலுத்தவும்.

பப்பாளி பால்:-

இந்தப் பால் வயிற்றில் குறைகளுக்கு மிகுந்த அநுகூலத்துடனே ஞாதனமாய் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. பப்பாளிக் காயை குத்தி அதினின்று வடியும் பாலைச் சேர்த்து எடுத்து பிருயமானவர்களுக்கு ௧ மேசைக் கரண்டி அளவு அல்லது அவுன்ஸ் பாலை சமனளவு தேனில் கலக்கி இதினுடன் இரண்டு அவுன்ஸ் கொதிக்கிற தண்ணீரை விட்டு எல்லாம் ஒன்றாய்க் கலக்கிக் கொண்டு ஆறினவுடன் குடித்த இரண்டு மணி நேரம் சென்ற பின் ௧ ஒரு அவுன்ஸ் ஆமணக்கெண்ணெய் அரை அவுன்ஸ், எலுமிச்சம் பழச் சாற்றுடன் கலந்து குடிக்கவும். இந்தப் படி இரண்டு நாள் தொடர்ந்து செய்யவேண்டும். மூன்று வயது முதல், ஏழு வயது வரையுள்ள குழந்தைகளுக்கு மேற்படி அளவில் பாதி போதும். மூன்று வயதுக்குக் கீழ் முன் சொன்ன அளவில் மூன்றிலொரு பங்காவது ௧ ஒரு கிராமாவது கொடுக்கலாம். இந்தப் பாலைக் கொடுத்த பின் வயிற்று வலி கண்டால் சர்க்கரையும், தண்ணீரும் அல்லது சர்க்கரையும் பாலுமாக பூர்த்தியாய்க் கொடுக்கலாம்.

ஆனை நெருஞ்சி:-

மஞ்சள் நிறமான சிறு புஷ்பமும் கதிர் போன்ற காயுமுடைய இந்த சிறு செடி இத்தேசத்தில் அனேக பாகங்களில் உலர்த்தி மணல் தரைகளில் சாதாரணமாயிருக்கின்றது.

மேக வெள்ளைக்கு:-

இந்த செடி அதிகப் பிரயோகமுள்ளதானதால் அதின் இலையும் காம்பும் உள்பட கால்புட்டி தண்ணீரிவிட்டு கலக்கிக் கொழு கொழுப்பாய் கட்டியாகும். இந்த விதம் குணம் காலை தோறும் ௰ பத்து நாள் தொடர்ந்து கொடுக்கில் மூத்திரம் விடும் பொழுது உண்டாகிற வலியை குறைக்கிறது மன்றி சில சமயம் வியாதியை தீரக் குணப்படுத்தும். இதை நன்றாய் பரிக்ஷை பண்ணுவதற்கு தகுதியான தாயிருக்கிறது. இது மூத்திரத்தை அதிகமாகப் போக்குவதால் சில நீர் கோவைக்கும் உபயோக்கபடும்.

நல்ல மிளகு- இது நல்லதாயும், புதியதாயும் இருக்கில் ஔஷதங்களுக்கு பலவிதமாய் உபயோகப்படுத்தப் படும்.

வாந்தி பேதிக்கு:-

பங்காளத்தில் அனேக வருஷமாக கீழ்ச் சொல்லியிருக்கிற மாத்திரைகள் நன்றாய் அநுகூலப்பட்டிருக்கின்றன். நல்ல மிளகு காயும் அபின் வகைக்கு ௨௰ இருபது கிரெயின் இவைகளை ஒன்றாய் சேரும்படி இடித்து ௰௨ பன்னிரண்டு மாத்திரைகளாக பகுத்துருட்டி அரை அல்லது ஒரு மணி நேரத்துக் கொரு தரம் ஒரு மாத்திரை வீதம் வியாதி சுகப்படு மட்டும் கொடுக்கவும். வியாதிக்காரன் தேவையான மட்டும் மதன நீராவது, கஞ்சித் தண்ணீராவது குடிக்கலாம். மேல் சொன்ன மாத்திரை பிருயமானவர்களுக்கு அதில் பாதி மாத்திரை 7 முதல் ௰௪ ஏழு முதல் பதினாலு வரையுள்ள வாலிபருக்கும் நிதானித்துக் கொடுக்கவும்.

குளிர் சுரம், அல்லது முறைக் காய்ச்சலுக்கு:-

நல்ல மிளகு ௪௰ நாற்பது, கிரெயின் காயம் ௨௰ இருபது கிரெயின், கழச்சிக் காயின் பருப்பு ௱ நூறு, கிரெயின் இவைகளை தேன் விட்டு ஒன்றாய் இடித்து ௩௰ முப்பது மாத்திரை செய்து சுரம் விட்டிருக்கிற போது தினம் ௨ அல்லது ௩ தரம் இரண்டு மாத்திரை முழுங்கவும். பிருயமானவர்களுக்கு இந்தப் பிரமாணமும் குழந்தைகளுக்கு இதில் பாதியும் கொடுக்க வேண்டும். இந்த மாத்திரைகளை கொடுக்கு முன் எப்பொழுதும் வயிற்றை ஆமணக்கெண்ணெயாலாவது மற்ற பேதி ஔஷதமாவது கொடுத்து சுத்தி பண்ணிக் கொள்ள வேண்டும்.

படர் தாமரைக்கு:-

நல்ல மிளகின் தூள் ஒரு அவுன்ஸ் நெய் ௪ நாலு அவுன்ஸ் இவை இரண்டையும் நன்றாய் அரைத்து தினம் தோறும் இரண்டு தரம் படர் தாமரையின் மேல் நன்றாய்த் தேய்க்கவும்.

மேக வெள்ளைக்கு:- வால் மிளகு கிடைக்காவிட்டால் நல்ல மிளகை தேனிலரைத்து ஒரு தரத்துக்கு பத்து கிரெயின் வீதம் தினம் மூன்று வேளை சாப்பிடவும். இது வால் மிளகிலும் தாழ்ச்சியானதால் அது கிடையாது போது தான் நல்ல மிளகைக் கொடுக்கலாம்.

கொடி_வேலி_யென்னும்_சித்திர_மூலம்:-

திரேகத்தில் எங்கே யாகிலும் கொப்பளிக்கப் பண்ணுவதற்கு அவசியமாயிருந்து இதற்கு வேறு ஒன்றும் கிடையாவிட்டால் கீழ்ச் சொல்லியதை பிரயோகிக்கவும். சிவந்த கொடிவேலி வேரை பறித்தவுடன் அதின் தோலியை உரித்துக் கொஞ்சம் கஞ்சித் தண்ணீர் விட்டு கட்டியாய் அரைத்து ஒரு துண்டுத் துணியில் தடவி கொப்பளமுண்டாக்க வேண்டும். ஸ்தலத்தில் வைத்துக் கட்டவும். ஐந்து நிமிஷ நேரம் சென்ற பிறகு எரியும். வலியு முண்டாகி அது அரை மணி வரை அதிகரித்திருக்கும். இதின் பின் அதை எடுத்து விட்டால் எரிவும் வலியும் தணிந்து அப்புறம் யஉ. அல்லது யஅ மணி நேரத்தில் பெரிய கொப்பள முண்டாக்கும். இதிலுண்டாயிருக்கும் சலத்தைக் குத்தி எடுத்து விட்டு ஒரு வாழைத் துண்டை வைத்துக் கட்டவும். புண் சுருக்காய் ஆறிப் போகும். இப்படிக் கொத்த கொப்பள முண்டாகும் ஔஷதங்களை அகோரமான இருமலுக்கு நெஞ்சிலும், தலை வலிக்கும் மற்ற நோய்களுக்கும் பிடரி கழுத்திலும் வைத்துக் கட்டினால் நன்று.

மாதளை:- மாதளை மரத்தில் இரண்டு பக்கங்கள் ஔஷதத்திற்கு உபயோகப்படும். அவை எவை யெனில் வேரின் தோலியும், பழத்தின் மேல்த் தோலியுமாம்.

வயிற்றுக்_கழிச்சலுக்கும்:-

பழகின வயிற்றுக் கடுப்புக்கும் மேல்படி பழத்தின் தோல் இரண்டு அவுன்ஸ் முக்கால் படி தண்ணீரில் வேக வைத்து அரை புட்டியாக்கி தினம் மூன்று நான்கு தரம் ஒன்றரை அவுன்ஸ் வீதம் கொடுக்கவும். கொஞ்சம் சதைத்த கிராம்பாவது கருவாய்ப் பட்டையாவது மேற்படி கசாயத்தில் சேர்த்துக் கொண்டால் உத்தமம். மருந்துக் கசாயம் முக்கியமாய் இத்தே சத்தாருக்கு உண்டாகும் வயிற்றிளைச்சலுக்கும் உபயோகமாயிருக்கும்.

தொண்டை_நோயுக்கு:-

முன் சொன்ன தனிக் கசாயம் அரை புட்டியில் ஒரு திராம் படிக்காரமும் சேர்த்து வாயிலிட்டு அலம்பவும். இது உபஸ்தத்தில் உண்டாகும் வடியல்களுக்கும் வெளியிலிருக்கும் நல்ல ஔஷதமாய் இருக்கிறது.

வயற்றிலுண்டாகும் நாடாப் போலிருக்கும் நாகப் பூச்சிக்கு இரண்டு அவுன்ஸ் மாதளை வேரின் தோலியை ஒரு புட்டி தண்ணீரில் வேக வைத்து அரை புட்டியாக்கி இதில் இரண்டு அவுன்ஸ் எடுத்து காலையில் உபவாசம் இருக்கும் பொழுது கொடுத்து மறுபடியும் அரைமணி நேரத்துக் கொரு தரம் கொடுக்கவும். இப்படி நாலு தரம் கொடுத்த பின் பேதிக்கு ஒரு அவுன்ஸ் ஆமணக்கெண்ணெய் கொடுக்கவும். சர்தாரணமாய் பன்னிரெண்டு மணி நேரத்துக்குள்ளாக நாகப் பூச்சிகளை வெளியே போக்கும். இந்த வகைக்கு இந்த ஔஷதத்தைப் பார்க்கிலும் மிகுந்த பலனுடையதாய் வேறே ஔஷதங்களை அரிதாய்க் காணும்.

அரிசி:- அரிசை மருந்தாய்க் கொடுக்கும் முறை மூன்று. முதலாவது கசாயம் அதாவது நன்றுத் தீட்டிக் கழுவி சுத்தி செய்து அரிசி நாலு அவுன்ஸ் இரண்டு புட்டி தண்ணீரி விட்டு வேக வைத்துப் பாதியாக்கி வடி கட்டிக் குடித்தால் சுரங்களுக்கும் வைசூரிக்கும் சிச்சிலுப்பை என்னும் சிறுவை சூரிக்கும் மற்று மெல்லாம் உஷ்ண ரோகங்களுக்கும் நன்று. இந்தக் கசாயத்தில் சிறு புளிப்பு தோற்றத் தக்க எலுமிச்சஞ் சாறும் வியாதிக்காரனுடைய இஷ்டம் போல் சர்க்கரையும் சேர்த்துக் கொண்டால் பலனை அதிகரிக்கும். இதை வியாதிக்காரனுடை இஷ்டம் போல் சர்க்கரையும் சேர்த்துக் கொண்டால் பலனை அதிகரிக்கும். இதை வியாதிக்காரன் செழிப்பாய் குடிக்கும்படி கொடுக்கவும். சில சுரங்களுக்கும் முக்கியமாய் மூத்திரம் குறைந்தும் மஞ்சள் நிறமாயுமிருந்தால் இரண்டு திராம் வெடியுப்பை ஒரு புட்டி அரிசிக் கசாயத்தில் கலக்கிக் கொடுக்கலாம். இதினுடன் இருமலுண்டாயிருந்தால் குன்றி வேரென்னும் நாட்டு அதிமதுரத்தில் இரண்டும் திராம் சதைத்து அதை மேற்படி கசாயத்தில்

வேகு முன் சேர்க்கவும்.

அரிசியின் இரண்டாம் பிரயோகம் யாதெனில் நேர்மையாய்ப் பொடித்த பச்சரிசி மாவை வைசூரியுண்டானவர்களின் தோலின் மேலும் மற்றும் தோல் மேல் வரும் உஷ்ண வியாதிக்கும் கனத்தில் தூவினால் மிகுந்த குளிர்ச்சியும் கொடுத்து வலியையும் குறைக்கும்.

__தீப்பட்ட புண்ணுக்கு__:-

வேறொரு மருந்தும் ஆஜரில்லாவிட்டால் தீப்பட்ட வுடனே நேர்மையான அரிசி மாவை அந்த ஸ்தலம் முழுதும் தூவி வடியும் நீரை பிடிக் கும்படி அதின் மேல் பின்னும் கனத்தில் அடுக்கடுக்காய்த் தூற்றி அடுக்கு ஒன்றாவது இளகிப் போகாமல் வைத்திருக்கவும். இப்படிச் செய்யும் நோக்கம் என்னவெனில் இரணத்தில்க் காற்று ஏறாமல் மிருதுவாய் மூடியிருக்க வேண்டும் மென்பதற்கு ஆனதாய் இருக்கிறது. சில நாளான பின் மாவின் அடுக்கு கட்டி சேர்ந்து வலியுண்டானால் அரிசி போலிட்டிசை விஸ்தாரமாய் செய்து கட்டி மாவின் அடுக்கை இளக்கின பின்பு சுண்ணாம்புத் தண்ணீரில் செய்த தயிலமாவது மெழுகு பிளாஸ்திரியாவது இடவும்.

அரிசி பிரயோகத்தில் மூன்றாம் முறை: போட்டிஸ் அது செய்யும் விதம். இரண்டு நேர்மையான அரிசி மாவின் போலாட்டி சின பக்குவத்துக்குத் தக்க கொதிக்கிற தண்ணீரை சேர்த்தாவது மாவின் குளிர்ந்த ஜலம் விட்டு கலக்கி சிறு தீயில் வைத்து அடிக்கடி கிண்டி கட்டி பருவத்தில் எடுத்தாவது ஒரு துண்டு துணியில் கனத்தில் தடவி தினம் இரண்டு அல்லது மூன்று தரம் மாற்றி மாற்றி வைத்து கட்டவும். இது வெல்லாம் விப்புருதிகளுக்கும் முக்கியமாய் வலியும் சூடுமுள்ள பருத்த மூல முளைக்கும் உபயோகமாய் இருக்கும்.

__நவாச்சாரம்__:-

கடைகளில் கிடைக்கும் நவாச்சாரம் சுத்த மற்றதாய் இருக்கிறதினால் அதை உள்ளுக்கு கொடுக்கு முன் கீழ்ச் சொல்லியிருக்கிற பிரகாரம் சுத்தி செய்துக் ~~கொண்டு~~ கொள்ள வேண்டும். இரண்டு   நவாச்சாரத்தை கொதிக்கிற தண்ணீரில் கலக்கி சூடுடன் வடிகட்டி ஆறின பின் ஒரு தட்டையான பாத்திரத்தில் விட்டு வெய்யிலில் வைத்து பின்பு காய்ந்து கட்டியாய் உப்புப் போலாகிறதை எல்லாம் உடனுடன் பேர்த்தெடுத்து குப்பியில் வைத்துக் கொள்ளவும். இப்படி சுத்தி செய்யப் பட்ட நவாச்சாரம் அனேக பாகங்களுக்கு உதவும். ஸ்திரீகள் பால் கொடுக்கும் போது அவர்கள் மார்பில் உண்டாகும் விப்புருதிக்கு கடை நவாச்சாரம் இரண்டு திராம் அரை புட்டி பன்னீரில் கலக்கி இதில் சீலையை நனைத்து வியாதியின் மேலிட்டு வைத்து சீலையை இரவும் பகலும் அடிக்கடி மாறி மாறி நனைத்திடவும். விப்புருதி உடைந்த பின் மார்பில் கட்டியிருக்கிறதை போக்குவதற்கும் மேற்படி மருந்து உபயோகமாயிருக்கும்.

அதிக நாள் பட்ட இருமலுக்கு கபம் போகாமலும் இருமலுடனேயும் இருக்கும் நெஞ்சு வலிகளுக்கும் இந்த உப்பில் பத்து கிரெயினை நாட்டு அதிமதுரத்தில் சேர்த்து மூன்று நான்கு மணி நேரத்துக் கொரு தரம் கொடுக்கவும். மேற்படி கசாயம் செய்கிற விதம் எப்படி என்றால் இரண்டு அவுன்ஸ் குன்றி வேரை அரை புட்டி தண்ணீரில் பத்து நிமிஷ நேரம் வேக வைத்து இதில் ஒரு தரத்துக்கு மூன்று அவுன்ஸ் வீதம் குடிக்க வேண்டும். கக்கிருமலுக்கு ஒரு தரத்துக்கு ஒன்று முதல் ஐந்து வரை அதற்குச் சமன் கறுவாய்த் தூளைக் கூட்டி குழந்தையின் வயது போல் நிதானித்துக் கொடுக்கில் மிகுந்த பலனைத் தரும்.

நுரை, ஈரல், இரைக் குடல் மற்றெந்த உள்ளுருப்பில் நின்றாவது இரத்தம் போனால் இரண்டு திராம் நவாச்சாரம் அரிசிக் கசாயம் அரை புட்டியில் கலக்கி வியாதியின் கடினம் போல இரண்டு அல்லது மூன்று மணி நேரத்துக்கு ஒரு தரம் ஒன்றரை அவுன்ஸ் வீதம் கொடுத்து வியாதிக்காரனை குளிர்ச்சியாகவும் அமைதலாகவும் படுக்க வைத்திருக்கவும். முக்கியமாய் குளிர் சுரத்தையாவது மற்றெந்த சுரத்தையாவது தொடர்ந்து வரும் நீர் கோவைக்கும் நவாச்சாரத்தை தினம் மூன்று நேரம் பத்து கிரேயின் வீதம் நன்னாரி வேர் கசாயம் இரண்டு அவுன்ஸில் சேர்த்துக் கொடுக்கவும். கழுத்து முதலான ஸ்தலங்களில் விசை நரம்புகளில் உண்டாகும் கட்டிகளுக்கும் மேற் சொன்ன பிரமாணம் உள்ளுக்குக் கொடுக்கலாம்.

முகத்தில் ஒரு ஸ்தலத்திலாவது அதின் ஒரு பக்கத்திலாவது முக்கியமாய் சீதளத் திலும் வாத சம்மந்தத் திலும் உண்டாகும் முக வலிக்கும் நவாச்சாரம் பிரயோசனம் உள்ளதாய் இருக்கிறது. சுத்தி செய்த நவாச்சாரம்.நய முப்பது கிரெயின் இரண்டு அவுன்ஸ் தண்ணீரில்க் கலக்கி கொண்டு நாலு மணி நேரத்துக் கொரு தரம் கொடுக்கவும். இப்படி நான்கு தரம் கொடுத்த பின் வலி நிற்காவிட்டால் அதை பின்னும் கொடுக்கிறது.

பல நில்லாதிருந்தால் நின்று விடலாம்.

நசிவுகள், சுளுக்குகள், நாள் பட்ட கட்டிகள், வாத வீக்கங்கள், விசை நரம்பு களிலுண்டாகும் வீக்கங்கள் முட்டு வீக்கங்கள் அரையாப்புக் கட்டிகள் பயங்கரமான விப்புருதி கள், பருக்கள் இவைகளுக் கெல்லாம் மேற்படி உப்பை கடையில் வாங்கின படி சுடு தண்ணீரில் கலக்கி வியாதியின் மேல் இட்டு அடிக்கடி நனைத்தால் வலியை நீக்கி வீக்கத்தைக் குறைத்து சவுக்கியப் படுத்தும். திரேகத்தின் எந்தப் பக்கத்திலாவது தோலின் மேல் வலியும் சூடும். சிகப்பு நிறமும் உண்டாகில் இரத்தச் சுரம் யென்னும் பெயர். இதற்கு அரை அவுன்ஸ் நவாச்சாரத்தை ஒரு புட்டி தண்ணீரில் கலக்கி இடுக்கில் வலி சூடு முதலானதை தணிக்கும் பன்னீர் கிடைக்குமாகில் சுத்த ஜலத்தைப் பார்க்கிலும் அதிக உத்தமம்.

<u>நன்னாரி வேர்:-</u>

நன்னாரி வேர் பரித்தவுடனே நாலு அவுன்ஸ் எடுத்து சதைத்து ஒரு புட்டி கொதிக்கி தண்ணீரிலிட்டு இரண்டு மணி நேரம் மூடி வைத்து பின்பு வடி கட்டவும். பிராயமானவர்களுக்கு ஒரு நேரத்துக்கு மூன்று அவுன்ஸ் வீதம் தினம் மூன்று நேரம் கொடுக்கவும். குழந்தைகளுக்கு ஒரு நேரத்துக்கு ஒன்றரை அவுன்ஸ் வீதம் கொடுக்கலாம். இதில் பஞ்சதாரையும் பாலும் சேர்த்து சூட்டுடன் குடித்தால் சாரம் அதிகப்படுவது மன்றி இன்பமான உருசியுள்ளதால் அதை குழந்தைகளும் உடனே குடிக்கும். எது காரணத்தாலாவது வரும் பலவீன மாறி பலப் படுவதற்கு இது மிகுந்த உபயோகமாயிருக்கிறது. மதவிரதி ரேகம் வெளிறி பலக் குறைவாயிருக்கும் குழந்தைகளுக்கும் சுகத்தைக் கொடுக்கும் மேக வியாதிகள், பருக்கள், தோல் வியாதிகள் அசீரணம், பசியின்மை, நெடுநாள் சென்ற வாதம் இவைகளுக் கெல்லாம் மிகுந்த பிரயோஜனமுள்ள ஔஷத மாயிருக்கிறது. தவிர அது சாதாரணமாய் வழக்கப்பட்ட ஒரு நேர்த்தியான பலன் கொடுக்கிற மருந்தாயிருக்கின்றது.

நிலவாகை கடைகளில் கிடைக்கும் நிலவாகை மிகவும் தாழ்ந்த சரக்காயும் புழுயு இலைத் துண்டுகள் காம்புகள் முதலிய குப்பைகள் உள்ளதாயும் இருக்கின்றது. இந்தி யாவில் முக்கியமாய் திரு-நெல்-வேலி நாட்டில் வளரப்பட்ட இலை. அரபி தேசத்திலிருந்து வருகிற சென்னமக்கி அல்லது மக்கா சென்னை யென்னும் நிலவாகையிலும் விசேஷம். இலை முழுமையும் சுத்தமாயும், முறியத் தக்கதாயும், வெளிறின் பச்சை அல்லது மஞ்சள் நிறமாயும் கடின வாடையுள்ளதாயும் இருக்க வேண்டும். அது பேதிக்கு மிகவும் நல்லது.

<u>அவுஷதம் கொடுக்க வேண்டிய முறைமையாவது:-</u>

நிலவாகை ஒரு அவுன்ஸ் சதைத்து சுக்கு கிரும்பு வகைக்கு.க திராம் இவைகளை அரை புட்டி கொதிக்கிற தண்ணீரிலிட்டு ஒரு மணி நேரம் வைத்திருந்து பின்பு வடிகட்டவும். இது ஒரு நேரத்துக்கு மூன்று அல்லது நாலு அவுன்ஸ் வீதம் கொடுக்கில் எல்லா மல பந்தங் களையும் நீக்கும். குழந்தைகளுக்கு மேற் சொன்ன அளவில் பாதியாவது அதில் குறைந் தாவது கொடுக்கவும். இதைப் பார்க்கிலும் குழந்தைகளுக்கு ஆமணக்கெண்ணெய் உத்தமம்.

<u>ஸ்கோல் விரை:-</u>

கடைகளில் கிடைக்கப் பட்ட ஸ்கோல் விரை மிருதுவும் சனித் தன்மையும் உன் டாக்குகிற குணங்களை உடையது. அது சுரத்தைக் கூடியாவது கூடாமலாவது இருக்கிற வயிற் றுக் கழிச்சலுக்கும், வயிற்றுக் கடுப்புக்கும் மிகுந்த உபயோகமான தாய் இருப்பதால் அதை பலனுடனே கொடுக்கலாம். இந்த வியாதிகள் வந்தவுடன் மேற்படி விரையில் நாலு திரும் ஒரு புட்டி ஜலத்தில் வேக வைத்து அரைப் புட்டியாய்க் குருக்கி வடிகட்டி இவ்வள வையும் ஒரு தினத்தில் பல தவணையாய்க் குடிக்கவும். இது குடிக்கும் சமயத்தில் அபினை வது வேறு அவுஷதமாவது பிரயோகிக்க அவசியமாயிருக்கில் அதுவும் கூட கொடுத்துக் கொள்ளலாம். நெடுநாள் சென்ற வயிற்றுக் கழிச்சலுக்கு ஒரு தரத்துக்கு மூமு விரையை

இரண்டரை திராம் வீதம் அரை திராம் கற்கண்டு அல்லது பஞ்சதாரையில் சேர்த்துக் கொடுக்கவும். அது குடலினுள் போகும் போது ஜலத்தை மிகுதியாய் உருஞ்சி வீங்குவதால் கீழ் குடலில்

~~இரண்டரை திராம் வீதம் அரை திராம் கற்கண்டு அல்லது பஞ்சதாரையில் சேர்த்துக் கொடுக்கவும். அது குடலினுள் போகும் போது ஜலத்தை மிகுதியாய் உருஞ்சி வீங்குவதால் கீழ் குடலில்~~

செல்லும் சமயம் பசுமையான சனித் தன்மையுடைய நீரையுண்டாக்கி எங்கும் மிருதுவாக்கிக் கடைசியில் மலத்தால் கழியும் விரோசனம் மிகுந்த தண்ணீர் போன்ற தாயிருக்கிறதற்கு மேல் படி விரை முக்கியமாய் உபயோகமாயிருக்கின்றது. இந்த ஔஷதம் சாப்பிடும் சமயத்தில் தாழ்ந்த பத்தியத்துடனே கொஞ்சம், கொஞ்சம் அபினை தின்றல் அநுகூலப்படுத்தும். மேக வெள்ளைக்கும் மேற்சொன்ன கசாயம் மிகுதியாய் பிரயோசனப்படும்.

<u>கெந்தகம்</u>:-

கடைகளில் கிடைக்கும் கெந்தகம் சுத்த மற்றதாய் அதில் ஒரு குறைந்த பங்கு பாஷாணம் சேர்த்தும் இருக்கலாம். ஆனதால் அது உள்ளுக்குக் கொடுக்கத் தக்கதல்ல. ஆனல் திரேகத்தின் மேல் இடுவதற்கும் மிகுந்த உபயோகமாயிருக்கிறது.

சிரங்குக்கும் மற்ற அனேக தோல் மேல் வரும் வியாதிகளுக்கும் கெந்தகம் மேலுக்கு நன்று இட்டால் மிகுதியாய் உபயோகப்படுகின்றது. மூன்று அவுன்ஸ் கெந்தகம் அரை புட்டி தேங்காய் எண்ணெயில் நன்றாய் அரைத்து கலக்கி சிரங்கு உண்டாயிருக்கிற ஸ்தலம் முழுவதும் தினம் ஒரு தரம் நன்றாய்த் தேய்க்கவும். அதைத் தேய்க்க வேண்டிய விதம் மிகவும் முக்கியமான தாயிருக்கிறது. மிருவாய்ப் பூசுகில் பலனில் வாத்தால் குறைந்ததில் பதினைந்து நிமிஷம் நேரம் வரையும் சிரங்கு கொப்பளங்கள் உடையும் படியாய் அழுத்தித் தேய்க்கவும். ராத்திரியில் தீயின் அருகே இருந்து தேய்க்கல், பிளாஸ்திரி இளகி நன்றாய் உளரிப் பிடிக்கும். இப்படி இரவு முழுவதும் வைத்திருந்து காலையில் அதின் பேரில் சவுக்காரத்தைத் தேய்த்து சுடு தண்ணீர் விட்டு கழுவிப் போடவும். இந்தப்படி வாசியாகு மட்டும் தினம் ராத்திரி செய்யவும். பிளாஸ்திரியை நன்றாய்த் தேய்த்தால் தான் சவுக்கியப்படும். சிரங்கில் சிறு புழு உண்டாவதால் வியாதிக்காரன் கட்டியிருந்த சீலையை பின் ஆராவது கட்டினல் அவர்களுக்கும் சிரங்கு உண்டாகும். ஆதலால் அந்தச் சீலை அவிழ்த்து சுத்தி செய்து உடுத்திக் கொள்ளவும். ஜலத்தில் கழுவினல் கிருமிகள் ஒழிய மாட்டாது.

கால்கள், கைகள் இவைகளில் நெடு நாளாக வாத முண்டாயிருந்தால் ங அவுன்ஸ் கெந்தகத் தூளை அரை புட்டி வேப்பெண்ணெய்யில் கலந்து தினம் இரண்டு நேரம் நன்றாய்த் தேய்க்கவும்.

<u>கள்ளுப் போலட்டிஸ்</u>:- இது செய்வதற்கு வேண்டிய மட்டும் அரிசி மாவை அதற்கு போதுமானதாய் உடன் இறக்கின கள்ளை விட்டுக் கலக்கி கொஞ்சமாய்த் தீ எரித்து கிண்டி பொங்க துவக்கினவுடனே இறக்கி ஒரு சீலையில் தடவி வைத்துக் கட்டவும். இது பிளவைகளிலும் வெரும் புண்ணுகளிலும் நின்று ஆனிச் சீழ் அல்லது அசரை போக்குவதற்கு உபயோகமுள்ளதாய் இருக்கிறது. இவற்றைப் போக்கின பின்பு புண்களில் ஆரம்படியான குறிகள் காணும். பொழுது மாவு போலாட்டி சாவது மெழுகு பிளாஸ்திரியாவது இடலாம்.

<u>வங்காளப் பச்சை</u>:-

செம்பிலுண்டாகும் வெளிறின் நீல நிறமான இந்த சரக்கு கடைகளில் நல்லதாய் காணப்படும். அதை ஒரு போதும் உள்ளுக்குக் கொடுக்கப் படாது. ஆனல் கீழ் சொல்லிய படி பூச்சு மருந்தாய் பலனுடனே பிரயோகிக்கலாம். ஒரு பங்கு நேர்மையாய் தூள் செய்த வங்கள பச்சையை பதினைந்து பங்கு நெய்யை அல்லது வெண்ணெய்யில் நன்றாய் அரைத்து நெடு நாளாய் ஆறுமலிருக்கும் புண்களுக்கு பல்லுடனே இடுகிறது மன்றி மேகத்தைச் சார்ந்த கெட்ட தொண்டைப் புண்களுக்கு இறகின் நுனியால் தொட்டு இடவும். மேற்படி புண்களுக்கு நெய் அல்லது வெண்ணெயை பார்க்கிலும் தேன் நன்று. ஒன்றிலும் தீராத படர் தாமரைக்கு நாளொன்றிற்கு இரண்டு தரம் மேற்படி குழம்பை நன்றாய்த் தேய்க்கில் வாசியாகும். இவைகள் மிகுந்த சிவப்பாயும் அவைகளில் சிவப்பு நிறமான புள்ளிகளுள்ளதாயும் இருக்கிற கண்ணோய்களுக்கு இந்த பிளாஸ்திரியை இமைகளில் தினம் இராத்திரி பூசினல் பலன் கொடுக்கும்.

வங்காள பச்சையை நன்றாய்த் தின்றிடும் சமயத்தில் முட்டையின் வெள்ளைக் கருவை மிகுதி யாய்க் கொடுக்கவும். இது ஆசரில்லாவிட்டால் பாலில் அரிசி மாவைக் கலக்சி அதிகமாய்க் கொடுக்கவும்.

துரிசு :- ஔஷதத்திற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட துரிசு துப்பரவான இருண்ட நீல நிறமான தாயும் பருந்துண்டுகளாயும் இருக்க வேண்டும். அவற்றின் மேல் வெண் பச்சை அல்லது வெண் நிறமான தூள் பற்றி யிருக்கில் உள்ளுக்குக் கொடுக்கு முன் நன்றாய் துடைத்துக் கொள்ளவும். இது அனேக கடைகளில் நற் சரக்காய் அகப்படும்.

சுரமின்றி அனேக நாளாயிருக்கப்பட்ட வயிற்றுப் போக்குக்கும், வயிற்றுக் கடுப்புக்கும் ஆறு கிரெயின் துரிசை நேர்மையாய்ப் பொடித்து ஒன்பது கிரெயின் துரிசை நேர்மையாய் அபினியுடன் நன்றாய்ச் சேர்த்தரைத்து ௰௨ மாத்திரையாக பங்கிட்டு நாளொன்றுக்கு மூன்று தரமாக ஒவ்வொரு மாத்திரை வீதம் கொடுக்கவும். வயிற்றுக் கடுப்புள்ளவர்களுடைய வயிற்றின் மேல் பிளா நெல் அல்லது கம்பளியை சுற்றி கட்டியிருக்கவும். வெளிறி பலவீன மாய் நெடு நாள் சுகமில்லா மலிருக்கும் குழந்தைகளின் தீராத வயிற்றுக் கழிச்சலுக்கு ஒரு கிரெயின் துரிசை நன்றாய்ப் பொடித்து ௰௨. சரி பங்கு செய்து இதில் ஒரு பங்கை .ந கிரெயின் கருவாயின் சூருடன் தேன் அல்லது பஞ்ச தாரையில் தினம் மூன்று தரம் கொடுக்க வும். மேற் சொல்லிய வியாதிகளை உடையவர்கள் பிராயமானவர்களாவது குழந்தைகளாவது சிலநாள் இந்த ஔஷதத் தன்றதில் சவுக்கியம் அடையாவிட்டால் அதை நிறுத்தி விடவும். ஏனெனில் அதை நெடு நாளாய் துடர்ந்து தின்னு மளவில் வாந்தியும் சூன்ம வாயுவும் உண் டாகும்.

குளிர் சுரங்கள் முறை சுரங்கள் இவைகளுக்கு முன் கொடுத்து சவுக்கியப் படாமலிருக்கில் துரிசை கீழ் சொல்லியபடி கொடுக்கலாம். நேர்மையாய் பொடித் துரிசுத் தூளை ஆறு கிரெயின் இவைகளை தேன் விட்டு நன்றாய் இடித்து ௰௨ மாத்திரையாக பங்கிடவும். இதில் முதலாவது ஒரு வேளைக்கு ஒரு மாத்திரை தினம் மூன்று தரம் கொடுத்து இதில் பலன் காணவிட்டால் தினம் நாலைந்து தரமாவது கொடுக்கலாம். மேற் சொன்ன பிரயோகம் பிருயமானவர்க்கே கொடுக்கத் தகும். ஆதலால் குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடாது. அதுவும் மற்ற மருந்துகள் கொடுத்து பார்த்த பின் தான் கொடுக்கலாம்.

நெடுநாள்ப் பட்ட புண்களின் விளிம்பைச் சுற்றி துரிசை மெதுவாய்த் தடவி வந்தால் சுருக்காய் வாசி வரும். இனி ஒரு முறையாவது மூன்று கிரெயின் துரிசை ஒரு அவுன்ஸ் தண்ணீரில்க் கலக்சி தினம் இரண்டு தரம் புண்களில் விட்டு பின்பு மூன்று அல்லது நான்கு நாளைக் கொரு தரம் துரிசியின் எடையை ஒவ்வொரு கிரெயின் வீதம் வியாதிக்காரன் உணர்வு போல அதிக நோவும் சூடுமில்லாமல் சிற்றெரிவும் உண்டாமு மாத்திரம் கொடுக் கும்படியாக ஒரு அவுன்ஸ் தண்ணீரில் பத்து கிரெயின் ஆகுமட்டு அதிக ருப்பித்துக் கொள்ளவும். அதில் அதிக எரிவு உண்டானால் துரிசின் காரம் குறையும்படி சற்றதிகமாய் ஜலத்தைக் கூட்டிக் கொள்ள வேண்டும். மேற்படி ஜலத்தை காலமேயும் சாயந்திரமும் புண்களில் விட்டு இடை வேளைகளில் அரிசி போலடிசைக் கட்டவும். துற்மாமிசத்துக்கு அதின் மேல் துரிசை மூன்று அல்லது நான்கு தினத்துக் கொருதரம் தடவவும். பிருயமானவர்களுக்காவது குழந்தை களுக்காவது வாயினுள் வரும் புண்களுக்கு ஐந்து கிரெயின் துரிசை நேர்மையாய்த் தூள் செய்து அரை அவுன்ஸ் தேனில் கலந்து விரலால் தொட்டு போடவும். பிள்ளைகளுக்கும் பாலகர்களுக்கும் மிகுதியாய் நீர் வடியும் கண்ணோய்களுக்கு ஒரு கிரெயின் துரிசை ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலக்சி தினம் மூன்று அல்லது நான்கு தரம் கண்ணைக் கழுவினால் குணம் வரும். கடினமான கண்ணோய்களுக்கு ஒரு அவுன்ஸ் தண்ணீரில் இரண்டு கிரெயின் துரிசைக் கூட்டிக் கொள்ளவும்.

படர் தாமரைக்கும் ~~தலைச் சொரிக்கும் துரிசி~~ :-

தலைச் சொரிக்கும் துரிசின் தூள் ௨ய இருபது கிரெயின் மாசக்காய்த் தூள் ஒரு அவுன்ஸ் மெழுகு பிளாஸ்திரி ஒரு அவுன்ஸ் இவை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து அரைத்து வியாதியுள்ள ஸ்தலத்தில் நன்றாய்த் தேய்க்கவும். சொரி சிரங்குக்கு ஒரு அவுன்ஸ் துரிசை அரைப் புட்டி தண்ணீரில் கலக்சி இடவும்.

அட்டை கடித்த வாயினின்று இரத்தம் போகிறதற்கு கொஞ்சம் துரிசை தூள் செய்த கடிவாயில் வைக்கில் நிற்கும் மூக்கில் நின்று மிகுதியாய் இரத்தம் போகிறதற்கு நாலு கிரெயின் துரிசை ஒரு அவுன்ஸ் தண்ணீரில் கலக்கி மூக்கிறள் விடவும். ஆனல் இது படிக்காரத்துக்குத் தாழ்ச்சியாய் இருக்கின்றது.

அபின் ஊமத்த எட்டிக் கொட்டை மற்றும் மயக்கத் தக்க நஞ்சுகளை விழுங்கினவர்களுக்கு ஐந்து கிரெயின் துரிசை அரை புட்டி சுடு தண்ணீரில் கலக்கி அவ்வளவையும் ஒரு தரமாய் குடிக்கவும். உடனே வாந்தி செய்யும். இதினல் அரை மணி நேரத்திற்குள் வாந்தி போகா விட்டால் மறுபடியும் இந்த வீதம் கொடுக்கவும். ஆனல் இதைத் தொடர்ந்து கொடுக்கும் அளவில் வாந்தி போகா விட்டால் பின்னும் கொடுததால் அது வயிற்றிலிருந்து நஞ்சாகவே தீருமாகையால் அதிகமாய் துடர்ந்து கொடுக்க கூடாது. இதைக் கொடுத்த பின்பு உடனுடன் வாந்தியாகுதற்கு துரிசைக் கொடுப்பது புத்தியானதால் மற்ற வியாதிகளுக்கு அது நலமான வாந்தி ஔஷதமல்ல. இந்த மருந்தைக் கொடுத்த பின் நஞ்சு போன்ற லக்ஷணங்கள் யாதேனு முண்டாகில் முட்டையின் வெள்ளைக் கரு மாற்று மருந்தா யிருக்கின்றது.

அன்ன பேதி:- இந்த பெயரால் கடைகளில் இரண்டு மாதரி சரக்குகள் விற்கபடுகின்றன. ஔஷதத்திற்குப் பிரயோகிக்கப்பட்ட அன்ன பேதியானது மஞ்சள் அல்லது அழுக்கு நிறம் போன்ற தூளாம். வெண்ணிறமான தட்டைக் கட்டிகளும் உண்டாயிருக்கில் இவைகளை நீக்கி பளிங்கு போல பிரகாசிக்கும் பச்சைக் கட்டிகளை மாத்திரம் தெரிந்தெடுத்துக் கொள்ளவும். அன்னபேதியை உள்ளுக்குக் கொடுத்த பின் காணும் குணம் மலத்தை கரு நிறமாக்குதல்.

தேகமும் கண்ணின் உள்ளிமைகளும் நாக்கும் உள்ளங் கைகளும் இரத்த மற்று வெளிறியிருக்கும் பாண்டுக்கும் பலவீனத்துக்கும் இந்த ஔஷதம் மிகுந்த பிரயோஜனமாயிருக்கின்றது. அன்ன பேதியும் கரிய போளமும் வகைக்கு கிரெயின் உயச கறு வாயத் தூளும் கிரெயின் இவைகளை போதுமான மட்டும் தேன் விட்டரைத்து உயச மாத்திரையாக்கவும் இதில் வேளைக்கு இரண்டு மாத்திரை வீதம் உ அவுன்ஸ் கிரியாத்துக் கசாயத்துடன் காலமேயும், சாயந்திரமும் கொடுக்கவும். இந்த மாத்திரைகள் உபஸ்தத்தில் நின்று மிகுதியாய் மேக வெள்ளை போகிற ஸ்திரிகளுக்கும், சூதகம் நின்று கஷ்டப்படுகிறவர்களுக்கும் கூடக் கொடுக்கலாம். கற்பமுள்ளவர்களுக்குக் கொடுக்கக் கூடாது. கரிய போளமும் மற்ற கூட்டு மருந்துகளும் ஆனிலலாவிட்டால் இரண்டு கிரெயின் அன்ன பேதியை இரண்டு அவுன்ஸ் தண்ணீரில் கலக்கி காலமேயும், சாயங்காலமும் கொடுக்கவும். குழந்தைகளின் திரேகமும் கண்ணின் உள்ளிமைகளும் இரத்த மற்று மிகுதியாய் வெளிறி பலவீனமாய் இருக்கிறதற்கு ஆறு கிரெயின் அன்ன பேதியை நன்றாய்த் தூள் செய்து அவ்வளவையும் யஉ பன்னிரெண்டு சரி பங்கு செய்யவும். இதில் ஒரு பங்கு மருந்தை மூன்று கிரெயின் கருவாய் பட்டை தூளுடன் தேனிலாவது அல்லது பஞ்சதாரையுமாவது கலந்து கொடுக்கவும். இந்த அளவில் தினம் மூன்று தரம் இரண்டு மூன்று வாரம் தொடர்ந்து கொடுக்க அவசியமாயிருக்கின்றது. கொடுத்து சில நாள் சென்ற பின்பு மேற்படி ஔஷதத்தைத் தின்று குழந்தையின் மலம் கரு நிறமாகும். இது மருந்தின் குணமென்று அறிந்து கொள்ள வேண்டும். மேற்படி மருந்தை உள்ளுக்குத் தின்னும் சமயத்தில் ஒரு வாரத்துக் கொரு தரம் பேதிக்கு ஆமணக்கெண்ணெய் கொடுக்கிறது உத்தமம்.

குளிர் சுரம்:-

மேற்படி அன்னபேதி அதிக பலவுடைய தாயிருக்கிறது. முக்கியமாய் வியாதிக்காரன் பலவீனமாய் வெளிறியும் சுரம் யாதொரு ஔஷதத்தாலும் தீராமலுமிருக்கிறதற்கு நன்று. அதை பிரயோகிக்கிற முறை எப்படி எனில் நன்மையாய் தூள் செய்த அன்ன பேதி உய கிரெயின் நல்ல மிளகின் தூள் நய கிரெயின், நல்ல மிளகின் தூள் நய கிரெயின், கடை அபின் ந கிரெயின் இவைகளை யெல்லாம் ஒன்றாய்த் தேன் விட்டரைத்து யஉ மாத்திரைகளாக திரட்டி கொள்ள வேண்டும். இதில் ஒருதரத்துக்கு இரண்டு மாத்திரை வீதம் தினம் இரண்டு, மூன்று வேளை கொடுத்து ஒவ்வொரு தரம் கொடுக்கும் மாத்திரைகளுடன் இரண்டு அவுன்ஸ் கிரியாத்துக் கசாயமும் கொடுக்க வேண்டும். மேற்படி மாத்திரைகளை தின்று வரும் பொழுது தாழ்ந்த பத்தியமாயும், எலுமிச்சம் பழம் முதலிய புளிப்புகளைத் தள்ளியும் மலம் நன்றாய்ப் போகும் படி

ஜாக்கிரதை செய்து இருக்க வேண்டியது. வாந்தியில் கஷ்டப்படுகிறவர்களுக்கும் வயிற்றுப் போக்குண்டாயிருக்கிறவர்களுக்கும் கொடுக்கக் கூடாது. இதை உள்ளுக்கு சாப்பிடும் பொழுது மலம் கருநிறமாய்க் காணும்.

நெடுநாளாய் குளிர் சுர மிருந்து வாசியான பின் வயிற்றுடன் இடது பக்கத்தின் மண்ணீரல் என்னும் உள்ளுறுப்பு பருத்து வெளியில் ஒரு வீக்கம் போல் காணுகிறதற்கு அன்ன பேதி கரிய போளம், கருவாய்ப் பட்டை இவை மூன்று சேர்த்து இருக்கும் மாத்திரைகளை கொடுக்கவும். இதில் கரிய போளத்தை மாத்திரம் 24 முதல் 48 கிரெயின் வரை அதி கரித்துக் கொள்ளவும். இதைக் கொடுத்த பின் ஒரு கிழமையில் ஒரு தரம் அல்லது இரண்டு தரம் ஆமணக்கெண்ணெய்யைக் கொடுத்து வயிற்றை நன்றாய் சுத்தி பண்ணிக் கொள்ள அவசிய மாய் இருக்கிறது. வீக்கத்தின் மேல் உண்டாகில் ஒரு கடுகு போலட்டிசைக் கட்டி தோல் சிவப்பு நிறமானவுடன் எடுத்துப் போடவும்.

நீர்க் கோவை யுண்டாகி நாவும் கண்ணிமை உட்புறங்களிலும் வெளிறி வியாதிக் காரன் பல நன்றிருந்திருந்தால் இரண்டு கிரெயின் அன்ன பேதியை ஒரு புட்டி தண்ணீரில் கலக்கி கொஞ்சம் கொஞ்சமாய் ஒரே தினத்தில் அவ்வளவையும் குடித்து விட வேண்டும். முகவலி தினந் தோறும் அல்லது இரண்டாளுள் தோரும் பதிவாய் ஒரு குறித்த சமயத்தில் வருகிறதற்கு அன்ன பேதியை ஒரு நேரத்துக்கு மூன்று கிரெயின் வீதம் தினம் மூன்று நேரம் கொடுக்கவும். அதினுடன் கொஞ்சம் கருவாய்த் தூளாவது கிரியாத்துக் கசாயமாவது சேர்த்துக் கொடுக்கவும்.

தண்ணீர்:- இது ஒரு கடை மருந்தல்லாதிருக்கினும் எல்லா தேசங்களிலும் கிடைக்கப் பட்ட தாயிருப்பதால் அதின் ஔஷத பிரயோகங்களில் சிலவற்றைக் காட்டுகிறோம். ஒரு பிராய மாயாவது தளர்ச்சியாவது அறிவு கேடாவது அசதி சன்னியாவது உண்டாயிருப்பதற்கும், சூரிய னுடைய காந்தி கொண்டு மூர்ச்சை அடைந்து விழுந்து போவதற்கும் இரண்டு மூன்று அல்லது அதிக பரும் சட்டிகளில் அதிகுளிர்ச்சியான ஜலத்தை தயார் செய்து வைத்துக் கொண்டு வியாதிக்காரனுடைய தலையின் மேலும் தோள் மேலும் இருக்கிற சீலைகளை எடுத்து விட்டு மேலும் உரோமத்தை க்ஷவரம் பண்ணுவது உத்தமமானதால் அப்படி செய்வித்து அவனை உட்கார வைத்து ஒருவன் அவனை பிடித்துக் கொள்ளவும். மற்றொருவன் ஒரு உயர்ந்த நாற்காலி அல்லது திண்ணையின் மேல் ஏறி சட்டிகளிலிருக்கும் குளிர்ந்த ஜலத்தை நோயாளியின் தலையின் மேலும் முதுகின் மேலும் பருந்தாரையாய் விடவும் வேண்டும். ஒன்றிரண்டு நிமிஷ நேரம் கழிந்த பின் வியாதிக்காரன் பெரு மூச்சு விடும் பொழுது தாரையை நிறுத்தி ஈர மில்லாத இடத்தில் மாற்றி அனலில் வெதுப்பிய சீலையால் திரேகத்தைத் துடைத்து கை, தோல், கால் முதலிய பக்கங்களை சூடு உண்டாகும்படி தேய்க்க வேண்டும். சுவரணைக்கே கடு பந்தியாய் உண்டாயிருக்கில் பாதங்களிலும் கெண்டை சதைகளிலும் கடுகு போலடிசை வைத்துக் கட்டவும். சவுக்கியமாகி கொஞ்ச நேரமான பின்பு மறுபடியும் சன்னி வலி சுவரணை கேடும் வருமாகில் முன் செய்தது போல் தலையிலும் முதுகிலும் ஜலத்தை விடவும். ஜலம் அவ்வளவையும் ஒரு தரமாய் விடாமலும் தலையின் மேல் விசையாய் விழும்படி ஊற்றாமலும் சிறு தாரையாய் தொடர்ந்து ~~விடவும்~~. விடவும். வியாதிக்காரனுக்கு உணர்ச்சி உண்டான பின்பு தாரை விடக் கூடாது. ஆனால் இப்படிச் செய்வது மிகுதியாய் வயது சென்றவர்களுக்கும் பிணியாளி பெண்ணாயிருந்தும் அவளுக்கு மேற்படி சன்னி வலி முக்கியமாய் சிரிப்பு அழுகையும் கூடியதாயிருந்தால் ஜலத்தைத் தலையின் மேல் முன் சொன்னபிரகாரம் உயரத்தில் நின்று விடுகிறதைப் பார்க்கிலும் கை நிறைய தண்ணீரைக் கோரி முகத்திலும், மார்பிலும் உரைப் பாய் அடிக்கவும். இவ்விதமாய் மூன்று நான்கு நேரம் செய்தால் சன்னியை நிறுத்தும். ஜலத் தை மெல்லென தெளிக்காமல் சற்றே உரைப்பாய் அடிக்கவும். சன்னி வலி உண்டாயிருக்கிற ஸ்திரிகளுக்கு சூதகம் இருக்கும் பொழுது மேற் சொன்னபடி குளிர்ந்த ஜலத்தை பிரயோகிக் கக் கூடாது. சிசுகளுக்கும் சிறு பிள்ளைகளுக்கும் வருகிற சன்னி வலிக்கும் ஜலப் பிரயோகத்தை வேருவிதமாய் செய்யலாம். சன்னி ஆரம்பித்வுடன் ஒரு பரந்த சட்டியாவது தொட்டியாவது நிரைய சகிக்கத் தக்க சூடான ஜலத்தை விட்டு அதில் குழந்தையின் திரேகம் முழுமையும்

தாம்த்தித் தலையை நிமிர்த்தி வைத்து அதின் மேல் குளிர்ந்த ஜலத்தால் நனைத்த சீலையை வைப்பதினால் சன்னி வலியை நிறுத்தும். ஆனால் உடனே ஒரு பேதிக்கு ஆமணக்கெண்ணெய் கொடுப்பது நலம். குழந்தையை ௫ முதல் ௰ நிமிஷம் வரை சுடுத் தண்ணீரில் வைத்திருக்க வேண்டும். அப்போது தலையில் குளிர்ந்த ஜலம் உள்ள சீலையை மாத்திரம் சில மணி நேரம் வரை எடுக்கா மல் வைத்திருக்கவும். இந்தக் கிரியை தினம் தோறும் மூன்று நாலு தரம் சன்னி மறுபடி வரும் போதெல்லாம் செய்யலாம். பின்ப கால்களில் கடுகு போல் படிசை சிறுதாய்ச் செய்து வைத்து ௫ நிமிஷம் நேரம் சென்ற பின் எடுத்து விடவும். தாமசியாமல் வயிற்றை நன்ருய் சுத்தி பண்ணுவதும் பெரிய காரியம். குழந்தைகளை சுடு தண்ணீரில் குளிக்கிறது அவர்களுக்கு வரும் வயிற்று வலியை சாந்தி பண்ணுதலுக்கும் உபயோகமாயிருக்கும்.

வாந்தி பேதிக்கு குளிர்ந்த ஜலம் மிகுந்த சிரேஷ்டமாய் இருக்கின்றன. நோயாளி வேறே எந்த ஔஷதம் உட் கொண்டு வருகிலும் குளிர்ந்த ஜலத்தை தேவையான மட்டும் எப் பொழுது குடிக்கக் கொடுக்கலாம். நோயாளிக்குத் தாகம் இருக்கும் பொழுது தண்ணீர் அதிகமாய் கொடுக்கப்படாது, என்று கட்டுபாடு செய்கிறது. மிகுந்த கெட்ட வழக்கமாய் இருக்கிறது ஜலம் எவ்வளவு குளிர்ச்சியாய் இருக்கிறதோ அவ்வளவும் நலம். வியாதிக்காரன் அவன் மனம் போலே தேவையான மட்டும் குடிக்கும்படியாய் அவன் பக்கத்தில் ஒரு சட்டி ஜலத்தை ~~மட்டும் குடிக்கும்படியாய் அவன் பக்கத்தில் ஒரு சட்டி ஜலத்தை~~ வைத்திருக்கவும். இப்படிக் குடிக்கும் படி செய்வது மற்ற மருந்துகளின் தொழில்களுக்கு உதவி செய்வதும் அன்றி வாந்தியாலும் பேதியிலும் போய் விடுகிற ஜலத்துக்கு பதிலாக சரீரத்தில் சேரும் படி செல்லுகின்றது. பிரசவமான பின்பு மிகுதியான இரத்தப் பாச்சலுண்டாகில் உடனே அதிக குளிர்ச்சியான ஜலத்தை வயறு, அடி வயறு முதலிய ஸ்தலங்களின் மேல் சற்றே உலர்த்தி விட்டு ஒரு மெல்லி சீலைத் துண்டை குளிர்ந்த ஜலத்தில் நன்ருய் நனைத்து உபஸ்தத்தினுள் செலுத்தி வைக்கவும். மேற்கண்ட சீலையை அடிக்கடி மாற்றி விடுகிறது மன்றி, அதை சுருட்டு கிறது. வாழைப் பூப் போன்ற மாதிரியில் இருக்க வேண்டும். காடி ஆறாயிருக்குமாகில் அதில் ஒரு பங்கு ஜலத்தில் ஒரு பங்கு சேர்த்து தனி சலத்துக்கும் பதிலாக எடுத்துக் கொள்ளலாம். இவை இரண்டும் கூடிய மட்டும் குளிர்ச்சியாயிருக்க வேண்டும். மேற்சொன்ன ரத்த பாய்ச்சல் நின்ற பின்பு சீலையை ஜலத்திலாவது காடி கலந்த ஜலத்திலாவது நனைத்து அடி வயிற்றின் மேல் இட்டிருப்பது நல்லதாயிருக்கின்றது. பிரசவ சமயங்களில் எப்போதும் இரண்டு மூன்று சட்டிகள் நிறைய குளிர்ந்த ஜலம் பக்கத்தில் வைத்திருக்க வேண்டும். இப்படிச் செய்யா விட்டால் கிணறு அல்லது ஆற்றில் நின்று ஜலத்தைக் கொண்டு வர அப்போது தாமசப்பட்டு இரத்தம் ஏற்றமாய்ப் போய் வியாதிக்காரி மரணமடைவதற்கு ஏதுவாம். ஆகிலும் ரத்தம் கிரமமாய் அல்லது சற்று மிகுதியாய் போவதற்கு இவ்விதக் குளிர்ச்சியான பிரயோகங்களை செய்யாமலிருக்கும்படி ஞாபகமாயிருக்க வேண்டும்.

பக்கப் பிளவைகளுக்கும் தசை அழுகிய புண்களுக்கும் கீழ் சொல்லியிருக்கிறபடி ஜலத்தை விடுகில் மிகுந்த உபயோகமாய் இருக்கும். வியாதிக்காரனின் மனம் போல குளிர்ந்த ஜலமாவது வெந்நீராவதும் இரண்டு மூன்று சட்டிகள் நிறைய எடுத்து வைத்துக் கொண்டு அதை ஒரு செம்பிலாவத் கெண்டியிலாவது எடுத்து புண்ணின் மேல் தொடர்ந்து தாரையாய் விடவும். இப்படி தினந்தோரும் இரண்டு தரம் செய்யவும். இதனால் மிகுந்த அசறு எடுக்கப் படுகிறது மன்றி சில நாளானவுடன் புண் சவுக்கியப் பட ஆரம்பிக்கும். புண் காலிலாவது கையிலாவது இருக்குமாகில் நோயாளி தானே ஜலத்தை விட்டுக் கொள்ளலாம். முதுகிலாவது கழுத்திலாவது உண்டாயிருக்கில் வேரே ஒரு மனிதனைக் கொண்டு செய்விக்கவும். ஜலத்தை புண்ணின் மேல் ஒன்றிரண்டு அடி உயரத்தில் நின்று விட வேண்டும். அசறு முற்றும், நீங்கி புண் சிவப்பாயும் சவுக்கியமாகிற இலட்சணமுடையதாயும் காணும் பொழுது ஜலத்தை நிறுத்தி புண்களில் மெழுகு பிளாஸ்திரியை இடவும். ஜலம் விடுகிறது குறைந்தாலும் ஒரு மணி நேரம் வரை வேண்டும் இடை நேரங்களில் கள் சேர்ந்த போலட்டிசை வைத்துக் கட்டவும்.

மூத்திரம் போகாமல் தடை பட்டிருப்பதற்கு சீலையை சுடு தண்ணீரில் முக்கி வியாதிக் காரன் சகிக்கத் தக்கதான சூட்டுடனே வயிற்றின் மேலும், அடி வயிற்றின் மேலும் இட்டு ஆறிப் போகிற போதெல்லாம் வேரே ஒரு சீலையை சுடு தண்ணீரில் முக்கி யிட்டு இப்படி அடிக்கடி

மாற்றி மாற்றி இடவும். இனி ஒரு பிரயோகம் எப்படி என்றால் ஒரு தொட்டியாவது பரந்திருக்கப்பட்ட பரும் சட்டியாவது கிடைக்குமாகில் அதில் சுடு தண்ணீரை விட்டு நோயாளியை பத்து அல்லது இருபது நிமிஷ நேரம் உட்கார வைத்திருக்க வேண்டும். இப்படிச் செய்தால் மூத்திரம் உடனே போகும்.

தோல் சூடாய் வரண்டும், வாயுலர்ந்தும் தாகம் அதிகமாய் இவ்விதமான இலட்சணங்களுடன் இருக்கும் சுரங்களுக்கெல்லாம் நோயாளி எலுமிச்சம் சாறாவது செழிப்பாய் குடிக்கவும். அப்பொழுது நன்றாய் குளிர்ந்திருக்கும் ஜலத்தினால் தலையை அடிக்கடி நனைத்து வைத்திருக்கவும்.

வைசூரி சிச்சிலுப்பை என்னப் பட்ட சிறுவை சூரி முதலிய வெடிக்குஞ் சுரங்களுக்கு தண்ணீரை தேவையான மட்டும் குடிக்கக் கொடுக்கிறது மன்றி வென்னீரிலாவது ஒரு பங்கு காடியும், மூன்று பங்கு ஜலமும் கலந்த நீரிலாவது மெல்லிய சீலை அல்லது கடற்காரையை நனைத்து தேகம் முழுவதும் மாதமாய் கழுவுகிறது. மிகுந்த சாந்தமும் சவுக்கிய முள்ளதாய் இருக்கிறது. வியாதிக்காரனுக்கு வென்னீரை விட குளிர்ந்த ஜலம் அதிக விருப்பமாயிருக்கில் குளிர்ந்த ஜலத்தை எடுத்துக் கொள்ளவும். இந்த விதமாய்த் தினந் தோறும் ஒன்று அல்லது இரண்டு தரம் தாராளமாய்ச் செய்யலாம்.

தொண்டைப் புண்களுக்கு சுடு தண்ணீரின் ஆவியை உள்ளுக்கு சுவாசம் வாங்கினால் அதிக குணம் உண்டாகும். ஆனால் சனித் தன்மையுள்ள வெண்டைக்காய்களில் யஉ அல்லது அதில் அதிகமாய் எடுத்து துண்டுகள் செய்து ஜலத்தில் வேக வைத்து அந்த ஜலத்தின் ஆவியை சுவாசம் வாங்கினால் பலன் அதிகரிக்கும். மேற்படி ஜலத்தை வாய் சுருங்கின பாத்திரத்தில் விட்டு அதின் ஆவி தொண்டையின் உள் நன்றாய் செல்லும்படி வாயை பாத்திரத்தின் வாயின் மேல் எடுத்து வைத்து செய்ய வேண்டும். சுடு தண்ணீர் ஒற்றிடம் புதிய விப்புருதிகள், பருக்கள் சுளுக்கு, குன்ம வாய்வு, குடல் வலி, சுவாச காசம், சுவாச முட்டுதலுடனிருக்கும் கடினமான இருமல் இவ்விதமான அனேக வியாதிகளுக்கு மிகுதியாய் உபயோகப்பட்டு இருக்கின்றன. அதைச் செய்யும் சரியான விதம் எப்படி என்றால் ஒற்றிடம் வேண்டும். ஸ்தலத்தை மூடத் தக்க அளவுக்கு சற்றே அதிகமும் கனமுமாக விஸ்தாரமாய் சீலைகளை மடித்து நோயாளி சகிக்கத் தக்க சலத்தில் நனைத்து சலம் வடியாமலிருக்கும்படி பிழிந்து விட்டு இட வேண்டிய பக்கத்தில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இரண்டு மூன்று நிமிஷ நேரம் சென்று சூடு ஆற முன் வேறே ஒரு சீலையை முன் போல பக்குவசம் செய்து வைத்துக் கொண்டு ஆறின சீலையை எடுத்து விட்டு இடை விடாமல் உடனே அதை இடவும். இவ்விதமாய் கால் மணி அல்லது அரை மணி நேரம் வரை சூடாக மாறி மாறி செய்யவும். கடினமான தலை நோவுகளுக்கும் இந்த சுடு தண்ணீர் ஒற்றிடம் மிகுந்த குணத்தைக் கொடுக்கும். பிரசவமான பின் உதிர் நிரை நன்றாய் போக்குவதற்கு அதைப் பலனுடனே பிரயோகிக்கலாம். நாளாயிருக்கும் வாதம் ஒன்றிலும் வாசியாகாத தோல் வியாதிகள் கால் கை முட்டுகளின் வலி ஆரம்பிக்கிற நீரளிவும், மகோதிரமும் மற்றும் தோல் வறண்டு சரசரப்பாயிருக்கும். வியாதிகளுக் கெல்லாம் சுடு தண்ணீர் ஆவியை பிடிக்கில் மிகுந்த பலனுண்டாகும். மேற்படி வியாதிகளோடும் கூட ஜீரம் உண்டாயிருந்தால் இந்தப் பிரயோகம் செய்கிறது புத்தியல்ல. சாதாரணமாய் கோழிகளையும், கோழிக் குஞ்சுகளையும் அடைக்கப்பட்ட கோபுரம் போன்ற மாதிரியில் ஒரு பருத்த கூட்டை தயார் செய்து அதின் உச்சத்தில் ஒரு மனிதனுடைய தலை தாராளமாய் செல்லும்படியாய் வட்டத்தில் ஒரு துவாரத்தை உண்டு பண்ணி இந்தக் கூட்டினுள் ஒரு நாற்காலியை இட்டு அதின் மேல் வியாதிக்காரனை இருந்து கொண்டு தலையையும் முகத்தையும் சட்டியின் மேல் துவாரத்தில் வெளியே வைத்துக் கொள்ளவும். பின்பு அந்தக் கூட்டை கனத்த கம்பளிகளால் பொதிந்து அவைகளின் மேல் ஓரங்களை வியாதிக்காரன் கழுத்தை சுற்றிச் சொருகி இவ்விதமாய் ஆவி வெளியே போகாமல் எத்தனஞ் செய்துக் கொண்டு அப்பால் ஒரு சட்டி கொதிக்கிற ஜலத்தை கூட்டினுள் வியாதிக்காரனை கனப்பாக வைக்க வேண்டும். இப்படி செய்வதிலிருக்க வேண்டும். நோக்கங்கள் இரண்டாகும். எவை யெனில் முதலாவது வியாதிக்காரன் இருக்கப் பட்ட கூட்டினுள் நின்று ஆவி சற்றும் வெளியில் போகாமல் இருக்கும்படியாகவும் இரண்டாவது

நோயாளி தன்னுடைய தலையை கூட்டின் துவாரம் விட்டு நன்றாய் வெளிப்படுத்தி ஆவியை அதிகமாய் சுவாசம் வாங்காமலிருக்கும்படிக் கழுத்தைச் சுற்றி கம்பிளிகளை நன்றாய் அடைத்து செருகி வைப்பது மானதாயிருக்கிறது. மேற் சொன்ன பிரகாரம் நோயாளி ஆவியைக் கொண்டான உடனே வேர்வை உண்டாக ஆரம்பிக்கும் அப்புறம் ஏறக் குறைய கால்மணி நேரம் சென்ற பின் வியாதிக்காரன் கூட்டை விட்டு வெளியில் வந்த உடனே உலர்ந்த சீலையால் வேர்வை முழுவதையும் நன்றாய்த் துடைத்து திரேகத்தில் குளிர்ந்த காற்று கொள்ளாமல் இருக்க வேண்டும்.

மெழுகு பிளாஸ்திரி:-

மெழுகு இரண்டு அவுன்ஸ், தேங்காய் எண்ணெய் ரு அவுன்ஸ் இவ்விரண்டையும் ஒரு பரந்த சட்டியிலிட்டு சிறு நெருப்பின் மேல் வைத்து நன்று மட்க்கரையு மட்டும் அடிக்கடி விடாமல் கலக்கி பின்பு சட்டியுடனே இறக்கி வைத்துக் கொண்டாவது அதை சூட்டுடனே வேறே ஒரு பாத்திரத்தில் விட்டு வைத்துக் கொள்ளவாவது செய்யலாம். இதை புண்கள் தோலுரிவு தீப் பட்ட புண் முதலியவற்றிக் கெல்லாம் அவைகள் சவுக்கியப் பட ஆரம்பிக்கிற சமயம் சீலையில் தடவி இட்டுக் கொள்ளவும். அனுபந்தம் அல்லது சேர்ப்பு.

கூழை நீர்:-

கூழை நீரில் செய்யும் குழம்பு போன்ற கஞ்சி அனேக வியாதிகளில் நோயாளிக்கு திரேகத்தில் பலன் உண்டாவதற்கு உபயோகமாய் இருக்கிறது. அதை செய்யும் விதம் எப்படி எனில் துப்பரவும் நன்மையும், வெண்மையுமான கூழை நீர் ஒரு மேசைக் கரண்டி அல்லது அரை அவுன்சில் கொஞ்சம் ஜலத்தை விட்டு நன்றாய்ப் பிசைந்து கொண்டு அதின் பின் கால் புட்டி கொடுக்கிற ஜலத்தை கிறம்மாய்க் கொஞ்சம், கொஞ்சம் விட்டு முழுவதும் நன்றாய்க் கலக்கி இரண்டு மூன்று நிமிஷ நேரம் அடுப்பில் வைத்து மறுபடியும் கலக்கி பின்று இறக்கி வைத்து அதில் கொஞ்சம் பஞ்ச தாரையும் வாசனை கொடுக்கும்படியாய் கொஞ்சம் சாதிக்காய் அல்லது கருவாயின் தூளும் சேர்க்கவும். ஜலத்துக்குப் பதில் பசுவின் பாலில் செய்கில் பலனை மிகுதியாய்க் கொடுக்கும். ஆனால் இது நன்றாய் ஜீரணமாகா விட்டால் தண்ணீரே நலம். மேற் காட்டிய பிரமாணம் பிறுயமானவர்கள் தினம் இரண்டு மூன்று தரம் சாப்பிடலாம். அதை தேவையான பொழுதெல்லாம் உடனுடன் செய்துக் கொள்ள வேண்டும்.

சவ்வரிசி:-

இது நோயாளிக்கும் பலாட்டியர் முன்னவனுக்கும் மிகவும் பலனைக் கொடுக்கிறது. ஆகாரமாயிருக்கின்றது. இதை கீழ் சொல்லியிருக்கிற பிரகாரம் செய்யவும். அரை அவுன்ஸ் நல்ல சவ்வரிசியை அரை புட்டி ஜலத்தில் இட்டிருந்து இருந்து மணி நேரம் சென்ற பின் அடுப்பில் வைத்துக் கால் மணி நேரம் வரையும் விடாமல் கலத்திலே வேக வைக்கவும். அதின் பின்பு கொஞ்சம் பசுவின் பாலும், பஞ்ச தாரையும் அல்லது இன்பமான வாசனை கொடுக்கும்படியாய் கொஞ்சம் சாதிக்காய் தூளாயாவது, கருவாய்ப் பட்டையின் தூளையாவது சேர்த்துக் கொள்ளவும். இதை எப்பொழுதும் தேவையான போதெல்லாம் உடனுடன் செய்துக் கொள்ளவும்.

கோழிக் குஞ்சின் சாறு:-

இது எந்தக் காரணத்திலாவது பலவீனத்தில் வருத்தப்படும் நோயாளிக்கு பலன் கொடுக்க உபயோகமுள்ளதாய் இருக்கிறது. அதை கீழ் சொல்லிய பிரகாரம் சரியாய் செய்ய வேண்டும். ஒரு முதிர்ந்த பெட்டைக் கோழியாவது, கிழச் சேவலாவது கொண்டு வந்து அதின் இறகுகளையும் உள்ளிருக்கும் குடல் முதலியவைகளையும் நீக்கி பின்பு அதை ஒரு கடுக்காயின் பருப்பத்தில் துண்டுகள் செய்து இதில் ஒரு புட்டி குளிர்ந்த ஜலத்தை விட்டு ஒரு மணி நேரம் வரையும் வைத்திருந்து அப்புறம் அதில் எட்டு அல்லது பத்து வெண்டைக்காய்களை சிறு துண்டுகளாக அறிந்து கடப் போட்டு சிறு தீயிட்டு அரை புட்டியாக வற்றினவுடன் வடிகட்டி

அதில் பிணியாளிக்கு ருசி கொடுக்கத் தக்கதாய் உப்புச் சேர்த்து ஆற வைத்து நன்றாய் வெந்த சாதத்தில் விட்டு சாப்பிடவும். இதை தினம் தோறும் புதிதாய் செய்துக் கொள்ளவும். குழந்தைகளுக்குப் பாதி வரட்சியான கோனி ஏற்றதாயிருக்கும்.

ஆட்டு இறச்சியின் சாறு :- 29.1.63.

இது உண்டாக்குவது கோழிக் குஞ்சின் சாறு செய்வது எப்படியோ அப்படியே செய்ய வேண்டும். ஒரு ராத்தல் ஆட்டிறைச்சியை பொடி பொடியாய் வெட்டி அரை புட்டி தண்ணீரிலிட்டு வேக வைத்துக் கொள்ளவும்.

இது குழந்தைகளுக்கு கோழிக் குஞ்சின் சாற்றை விட நல்லதல்ல. மருந்து முற்றும்.

விப்புருதி :-

முதலாவது சுடு தண்ணீரில் ஒற்றலிடவும். பின்பு அதின் மேல் நவாச்சாரத் தண்ணீரை அடிக்கடி விடவும். சீழ் கட்ட தவக்கினவுடன் அரிசி மாவின் போலட்டிசையாவது வைத்துக் கட்டவும். விப்புருதியின் மேற்ப் பக்கம் விரலை வைத்து அழுத்தும் போது சீழ்ப் பிதுங்கி தழும்பிக் காண்கில் மிகுதியாய் முளைத்திருக்கும் பக்கத்தில் கரு-வியால் கீறி அரிசிமாவின் போலிட்டிசை வைத்துக் கட்டவும். இப்படித் தினம் தோரும் இரண்டு, மூன்று தரம் செய்து கட்டவும். தூக்கத்துக்கு விரோதமாய் வலி அதிகமாயிருக்கில் அபினைக் கொடுக்கவும். நோயாளி அதிக பலவீனமாயிருக்கில் ~~நோயாளிக்~~ கோழிக் குஞ்சின் கசாயம் அல்லது ஆட்டிறைச்சியின் கசாயம் தினம் தோரும் கொடுத்து நல்ல சாப்பாடும் செய்விக்கிறது. அப்பொழுது வேப்பன் பட்டை கசாயமாவது கிரியாத்துக் காடி நீரினாவது கொடுக்கவும். இரைக் குடலில் புளிப்பு சுண்ணம்புத் தண்ணீர் கொடுக்கவும். நோயாளி தனக்கு வழக்கமாய் ஒத்துக் கொள்ளாத பதார்த்தங்களை தின்மைல் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். புளிப்பு திராவங்களை நஞ்சாக உட்கொண்டதற்கு நஞ்சுகளைக் குறித்துக் கூறியதைப் பார்க்கவும்.

குளிர் சுரம் அல்லது முறைக் காச்சல் முதலாவது ஆமணக்கெண்ணெய் பேதிக்குக் கொடுத்து குடல்களை நன்றாய் சுத்தி பண்ண வேண்டும். அப்புறம் கடுக்காய்க் குடி நீர் அல்லது நேர்வான மாத்திரையைக் கொடுக்கவும். தினம் ஆரம்பித்தவுடன் குரிஞ்சா வென்னும் ஔஷதத்தை நன்றாய் வாந்தியாகும்படி கொடுக்கிறது நலம். குளிர் விடுகிற போது திரேகத்தை நன்றாய் மூடி சுக்குக் குடி நீரை கொடுக்கவும். பின்பு உப்பை யாவது மணலையாவது சூடு செய்து பைகளில் அல்லது சீலையில் கட்டி கால்களில் ஒற்றவும். திரேகம் சூடாகும் சமயத்தில் வெடியுப்பு அல்லது எலுமிச்சம் சாறு சேர்த்த ஜலத்தையாவது, அரிசி கசாயத்தையாவது வேண்டிய மட்டும் கொடுக்கவும். தலைவலி அதிகமாயிருந்தால் தலையின் மேல் குளிர்ந்த மருந்து நீராவது குளிர் குசியான காடியுடன் சமனளவு ஜலமும் சேர்த்தாவதும் இடவும். இதுவு மன்றி சுரத்தைச் சார்ந்து வருகிற தலை நோவுகளுக்கு சொல்லியிருக்கும் பிரயோகத்தையும் செய்யலாம். ஜீரம் மறுபடியும் வராமலிருக்கும்படிக்கு நல்ல மிளகு சேர்வை கொண்ட மாத்திரையாவது வேப்பன் பட்டையாவது, அன்ன பேதியையாவது கிரியாத்தையாவது ஜீரம் விட்டிருக்கும் சமயம் பார்த்து கொடுக்கவும். மேற்படி ஔஷதங்களால் பலனுண்டாகாவிட்டால் வெள்ளைப் பாஷாணத்தையாவது, துரிசையாவது கொடுக்கவும். ஜீரம் நின்ற பின் வயிற்றின் இடது பக்கத்தில் உண்டாகும் வீக்கத்துக்கு அன்ன பேதி கொடுக்கவும். பசியின்மை. இதற்கு கிரியாத்துக் கசாயமாவது கிரும்பு, கசாயமாவது கொடுக்கலாம்.

அசதி சன்னி நோயாளி சிறுவனும் பலவானுயு மிருந்தால் குளிர்ந்த ஜலத்தை தலையின் மேல் உயர்த்தி விடவும். நோயாளி கிழவனாய் அல்லது மிகுதியாய் பலமற்று மெலிந்திருப்பானாகில் இப்படி செய்யக் கூடாது. குளிர்ந்த மருந்து நீராவது காடியில் ஜலமும் சமனளவில் சேர்த்தாவது தலையில் நனைத்து இட்டு வைக்க வேண்டும். கடுகு போலிட்டிசை பாதங்களிலும் கெண்டைக் கால்களிலும் வைத்துக் கட்டி நேர்வாள மாத்திரைகளில் ஒன்று அல்லது இரண்டு கொடுக்கவும்.

இரத்தங் குத்தி வாங்குதல் :-

நல்ல பிராயமும் புலமுள்ளவனு யிருக்கிற நோயாளிக்கே தகும். ஆனல் விருத்தா

பலவீனனுக்கும் சற்று உஷ்ணம் கொடுக்கிற சாராயமாவது, பிராந்தியாவது ஜலத்தில் சேர்த்துக் கொடுத்து முன் சொல்லியிருக்கிற வேறு பிரயோகங்களையும் செய்ய வேண்டும். வெள்ளைப் பாஷாணத்தை நஞ்சாகத் தின்றிடுதல் முதலாவது செய்தால் என்ன வென்றால் வாந்திக்குக் கொடுத்து வயிற்றைச் சுற்றி வருத்த வேண்டும். இதற்கு துரிசைக் கொடுத்து தொண்டையை ஒரு சிறகால் அல்லது விரலால் கூச்சமாகும்படி தடவி அதிகமாய் சுடு தண்ணீராவது முக்கியமாய் அரிசிக் கசாயமாவது, பாலாவது, பஞ்சதாரையும் தண்ணீருமாக கலந்தாவது முட்டையின் வெள்ளைக் கருவை சுடு தண்ணீரில் நன்றாய் கலந்தாவது வாந்தியாகும்படி கொடுக்கவும். வாந்தி சற்று நின்றவுடன் தேங்காய் யெண்ணெய்யில் ஒரு முட்டையின் வெள்ளைக் கருவை கலந்து கொடுக்கச் செய்யலாம். அப்புறம் நாலு அவுன்ஸ் சுண்ணம்புத் தண்ணீரை அதற்குச் சமன் பாலுடன் சேர்த்து ஒரு மணி நேரத்துக் கொரு தரம் கொடுக்கவம். முட்டையின் வெண் கருவை தனிப்பட மிகுதியாய்க் கொடுக்கவுஞ் செய்யலாம். வாந்தி நின்றதின் பின் ஆமணக்கெண்ணெய்யை பேதிக்காகக் கொடுக்கவும். வாந்தி போய் இரைப்பை நன்றாய்ச் சுத்தியான பின் வலியும் சூடும் தணியும்படி அபினைக் கொடுக்கவும். குடல்கள் பெந்தப் பட்டு இருக்குமாகில் தினந்தோறும் ஆமணக்கெண்ணெய்யை கொடுக்கவும். அதிகமாய் பலவீன முண்டாயிருக்கில் கொஞ்சம் பிராந்தியாவது நல்ல சாராய்மாவது கொடுக்கவும். இரண்டா நாளுக்குப் பின்னும் இதின் லெக்ஷணங்கள் உண்டாயிருக்குமாகில் நவாச்சாரம் ஒரு தரத்துக்கு பத்து கிரெயின் வீதம் மூன்று தரம் கொடுக்கவும்.

சுவாச_காசம்:-

இந்த வியாதிக் கெல்லாம் நோயாளி சகிக்கக் கூடிய சூட்டனே தன்னுடைய நெஞ்சில் சுடு தண்ணீரால் ஒற்றிடம் கொடுக்க வேண்டும். இதன் பின்பு காய்ந்த தண்ணீராவது சூடுத் தண்ணீராவது வெள்ளுள்ளி சாற்றலாவது குடிக்கவும். ஊமத்திலையைச் சுற்றி புகைய வைப்பதும் அல்லது கொஞ்சம் புகையிலை சுருட்டு குடிப்பதும் அல்லது வெடியுப்பை சுட்ட புகையை உள்ளுக்கு சுவாசம் வாங்குவதும் பலனைக் கொடுக்கும். ஊமத்தை வழங்குகிறது அதிக பத்திரத்துடனே இருக்க வேண்டியது.

படுக்கையில்_உண்டாகும்_புண்களை_நிறுத்துவது:-

சூடத் தயிலத்தை தினம் தோறும் தொட்டு இடவும். இரப்பையில் நின்றாவது நுரை, ஈரலில் நின்றாவது மற்றெந்த உள்ளுருப்பில் நின்றாவது உண்டாகும் இரத்தப் பாய்ச்சல் இது ஜீரத்தைக் கூடியிருக்கில் நோயாளி கஞ்சித் தண்ணீரை மாத்திரம் குடித்து திரேகத்தைக் குளிர்ச்சியாயும் முற்றும் அமைதலாயும் படுக்க வைத்திருக்க வேண்டும். எலுமிச்சஞ் சாறு கலந்த பானத்தை மிகுதியாய்க் கொடுக்கவும். இதுவுமன்றி வெடியுப்பையுங் கொடுக்கவும். ஜீரம் கூடியிராமல் யிருக்குமாகிலும் நோயாளியை குளிர்ச்சியாயும் முற்றும் அமைதலாயும் வைத்து படிகாரமாவது, நவாச்சாரமாவது கொடுக்கவும். நோயாளி பலவீனமாய் அல்லது ஆயாசமாயிருப்பானாகில் படிக்காரம் உத்தமம்.

ஆமணக்கெண்ணெய்யை சாந்தமாய் பேதியாகும்படி கொடுக்கவும். மூக்கில் நின்று உண்டாகும் இரத்தப் பாச்சல் இது மிகுதியாயும் ஜீரத்தை சாரர்மலும் இருக்கில் படிக்காரத் தண்ணீரையாவது மூக்கிலுள் விடவும். அல்லது மாயக்காயின் நேர்மையான தூளை மூக்கிலுள் இழுக்கவும். அன்றியும் கழுத்தின் பிடரியில் தளுப்பாயிருக்கப்பட்டா நின்ற ஒரு இரும்பு தாழ்க் கோலை வைத்திருப்பதினலாவது முதுகெலும்பின் மேற்பக்கத்தில் குளிர்ந்த ஜலத்தை விடுவதினலாவது சில வேளை இரத்தம் நிற்கும். ஜீரம் மிகுதியாய் உண்டாயிருக்கில் உள்ளுருப்புகளில் நின்று உண்டாகும் இரத்தப் பாச்சலுக்குக் கூரிய ஔஷதங்களைக் கொடுத்து ஒரு பங்கு காடியுடன் மூன்று பங்கு தண்ணீரைச் சேர்த்து மூக்கிலுள்ளேயும் நெற்றியின் மேலும் இடைவிடாமல் விட்டு நனைத்து வைத்திருக்க வேண்டும். நோயாளி நேராய் நிமிர்ந்து நின்று ஆகாயத்தில் தன் இரு கைகளையும் தலைக்கு மேல் சில நிமிஷ நேரம் பிடித்திருந்தால் மாத்திரம் போதும். குணம் வரும். அட்டைகளின் முறிவில் நின்று உண்டாகும் இரத்தப் பாய்ச்சல் படிகாரத்தின் தூளையாவது துரிசின் தூளையாவது முறிவில் வைத்தால் இரத்தம் நிற்கும். சிலந்திக் கூட்டை வைத்தாலும் நிற்கும் கடிவாயை விரல் நுனி கொண்டு அழுத்திக் கொள்ள வேண்டும்.

பிரசவமான பின் உண்டாகும் இரத்தப் பாச்சல், மூல முளையினின்று உண்டாகும் இரத்த பாச்சல், முறிவுகளில் நின்று உண்டாகும் இரத்த பாச்சல் இவைகளுக்கு அதினதின் பிரிவின் கீழ் பார்க்கவும். ~~கொடிவேலியால்~~

கொடிவேலியால் தோலின் மேல் கொப்பளிக்கப் பண்ணும் விதம்.

கொடிவேலியின் கீழ் பார்க்கவும். தோலின் மேல் எந்த விதமாய் கொப்பளித்திருக்கிறும் அதின் மேல் புதிய வாழைக் குருத்திலையும் வைத்துக் கட்டுவது நலம். முதலாவது இரண்டு நாளைக்கும் இலையில் மிருதுவான மேற் பக்கத்தை தோலின் மேலிட்டு மற்ற நாளில் அதின் அடிப்பக்கத்தை இடவும். இப்படி புண் வாசியாகிற மட்டும் இடவும். சாதாரணமாய் ஐந்து நாளில் கொப்பளமான புண் வாசியாகும்.

பருக்கள், விப்புருதிகளுக்கு எப்படி ஔஷதம் செய்வதோ அப்படியே ஒற்றிடம் இடவும்: நவாச்சாரத் தண்ணீர் விடவும். மாவு போலிட்டால் அல்லது வெந்த ஈருள்ளிப் போல்ட்டிஸ் வைத்துக் கட்டவும். வலியும் சிவப்பு நிறமும் உண்டாயிருந்தால் மாத்திரமே அட்டைகளை விடலாம். இல்லாவிட்டால் அவைகள் அவசியமில்லை. நாட்டு நன்னாரி வேர் உள்ளுக்குக் கொடுக்கவும். இதுவு மந்த விர சர்க்கரையும் மஞ்சள் நிறமான சவுக்காரமும் சமன் எடை எடுத்து ஒன்றாய்ச் சேர்த்து சீலையில் தடவி பருவின் ~~மேல்~~ இடுகிறது. அதிக உபயோகமாயிருக்கும்.

பக்கப் பிழவைகள்:-

இவைகள் உண்டாகும் ஆரம்பத்தில் சுடு தண்ணீர் ஒற்றிடம் இடவும். வலியும், சூடும் மிகுதியாயிருக்கில் அ அல்லது ய அட்டைகளை வீக்கத்தின் மேல் அல்லது அதின் ஓரத்தைச் சுற்றி விடவும். அரிசி மாவு போலிட்டிசை வைத்துக் கட்டவும். நித்திரைக்கு விரோதமாய் வலி கடினமாயிருக்கில் அபின் கொடுக்கவும்.

கீழ் சொல்லியிருக்கும் விவரங்கள் போல ஜாக்கிரதையாய்ச் செய்ய வேண்டும். அவை எவை எனில் பிழவை உடைந்த புண்ணுல் அதின் மேல் கள்ளுப் போல்ட்டிஸ் வைத்துக் கட்டி தினம் இரண்டு தரம் அதின் மேல் தண்ணீரை உயரமாய் விடவும். இப்படிச் செய்வதினுல் அதிலிருக்கும் அறு வேறு பட்டு வந்து விடும். புண் மிகவும் கெட்ட நாற்றமுளளதாயிருந்தால் அடுப்புக் கரி போலட்டிசை கள்ளுப் போலிட்டி சுக்கு பதிலாய் வைத்துக் கட்டி வெங்காரத் தண்ணீரால் புண்ணை தினம் தோறும் கழுவவும். புண்ணின் நடுவிலிருக்கும் அசறு வருமட்டும் இந்த பிரயோகத்தை செய்து அதின் பின் மெழுகு பிளாஸ்திரியாவது புண்களுக்கான வேறு சில ஔஷதங்களாலாவது இடவும். இந்த வியாதி முழுதிலும் முக்கியமாய் உண்டாக ஆரம்பித்த பின் நோயாளிக்கு இரைச்சியும், நன்னாரிக் கசாயமாவது வேப்பம் பட்டையாவது சாந்த உஷ்ணமாயுள்ள ஔஷதங்களும் கொடுத்து பலத்தை திரட்சப் படுத்தவும். இந்தப் பருக்களை அவைகளின் வீக்கம் முழுதிலும் இவ்விதமாய்க் கருவியால் கீரி விட அவசியமாயிருக்கின்றது. ஆனல் இது ஒரு சரியான வைத்தியரின் உதவியன்றி செய்யக்கூடாது. ஏனெனில் அனேக விதமான கட்டிகள் நிசமான பின் வையாயிராமலிருந்தும் அவைகளை பிளவை யென்றே சுதேசிகள் சொல்லுகருர்கள். அதினுல் இப்படி தப்பிதமான கட்டிகளை மேற் சொன்ன மாதிரியாய் கீரினுல் மிகவும் பொல்லாங்கு சம்பவிக்கும்.

குடலில் அதிகமான வலி இதற்கு கடுகு போலிட்டிஸ் வைத்துக் கட்டவும். அல்லது சுடு தண்ணீர் ஒற்றிடம் இடவும். உள்ளுக்கு அபினுவது, பெருங்காயமாவது, சுக்கு குடிநீராவது, கிராம்புக் குடிநீராவது கொடுக்கவும்.

குணம்:- வாய்வின் கீழும் பார்க்க வேண்டும். ஆசனத்தின் வழியாய்க் குடல் தள்ளுதல் இதற்கு உடனே தள்ளின குடலை திரும்ப உள்ளுக்குச் செலுத்தின பின்பு மாசக்காயின் தூள் சேர்த்த பிளாஸ்திரியை பவுனத்தின் மேல் தடவவும். அல்லது படிக்காரத் தண்ணீரை இடவும். இந்தப் படிக்காரத் தண்ணீர் குழந்தைகளுக்கு நன்ருய் தகுந்ததாயிருக்கிறது. ~~மலபந்தம்~~

மலபந்தம்:-

ஆமணக்கெண்ணெய் கரிய போளம் நிலவாகைக் குடிநீர் கடுக்காய் கசாயம், நேர்வாள மாத்திரைகள் இவைகள் எதாவது கொடுக்கலாம். குழந்தைகளுக்கு ஆமணக்கெண்ணெயு

நிலவாகை கசாயமும் நன்றாய்த் தகுந்தது ஸ்திரிகளுக்கு சூதகம் முறை தப்பாயாவது நின்றாவது இருக்கில் கரிய போளம் தகுந்தது பலமுள்ள பிராயமு மானவர்களுக்கு கடுக்காயும், நேர்வாள மாத்திரைகளும் தகுந்தது இந்த மருந்துகள் ஒவ்வொன்றின் கீழ் சொல்லி இருக்கிறதை பார்க்கவும்.

<u>சிரமமில்லாத மலப் போக்கு:-</u>

இதற்கு வில்வ சார் பத்து குடித்தால் சவுக்கியப்படும். ~~ஸ்திரிகளின் மார்பில் உண்டாகும்~~

<u>ஸ்திரிகளின் மார்பில் உண்டாகும் விப்புருதி:-</u>

இதற்கு நவாச்சாரத் தண்ணீர் தொடர்ந்து தொட்டு இடவும்.

இருமலுடன் சுவாச காச முட்டில் சுடு தண்ணீர் ஒற்றிடம் கொடுத்து சூடத் தயிலம் தேய்க்கவும். குழந்தைகளின் இருமலின் கீழும் பார்க்கவும்.

நசிகள் முதலாவது சுடு தண்ணீர் ஒற்றிடம் கொடுக்கவும். அதிக வலியும் வீக்கமுமுண்டாயிருந்தால் ஆறு எல்லது எட்டு அட்டைகளை கடிக்க விடவும். நசிவு பட்ட பக்கம் சூடாயிருக்கிற போது நவாச்சாரத் தண்ணீர் விடவும். பின்பு சூடத் தயிலமாவது அபின் தயிலமாவது நன்றாய்த் தேய்க்கவும்.

கடினமில்லாத நசிவுகளுக்கு மேற் சொன்ன தயிலங்களை மாத்திரம் தேய்க்கவும். அரையாப்புக் கட்டிகள் - இவைகளுக்கு ஏறக் குறைய விப்புருதிக்கான ஔஷதங்களை செய்யவும். மலசுத்தி செய்து நோயாளி நடவாமலிருக்கவும். மேற்படி கட்டி புண்ணால் வெங்காரத் தண்ணீரை விடவும். கடினமில்லாத அரையாப்புக்கு அபின் அவசியமில்லை.

தீப்பட்ட புண்களும் இவைகள் உண்டானவுடன் சுண்ணாம்புத் தண்ணீர் சேர்த்த தயிலமாவது நேர்மையான அரிசி மாவையாவது இடவும். அதின் பின் புண்கள் சவுக்கியப்பட ஆரம்பிக்கிற பொழுது மெழுகு பிளாஸ்திரியை இடவும். ஜீரத்துடன் நெஞ்சு வலி இதற்கு அட்டைகளை விடவும். சுடு தண்ணீர் ஒற்றிடமாவது, கடுகு போலிட்டிசாவது பிரயோகித்து உள்ளுக்கு நவாச்சாரத்தை கொடுக்கவும். இருமல் கூட உண்டாயிருக்கில் சூடத் தயிலத்தையாவது அபின் தயிலத்தையாவது தேய்க்கவும்.

<u>பிரசவம்: பிரசவ வலியின் கீழ் பார்க்க:-</u>

குழந்தைகள் வெளிறி பலவீனமாயிருக்கில் அன்ன பேதியை அல்லது நாட்டு நன்னாரி வேரைக் கொடுக்கவும். குழந்தைகளின் பலபந்தம், மலபந்தத்தின் கீழும் குழந்தைகளின் சன்னி வலி, சன்னி வலியின் கீழும் குழந்தைகளின் இருமல் இருமலின் கீழும் குழந்தைகளின் வயிற்று வலி, வயிற்று வலியின் கீழும் குழந்தைகளின் வயிற்றுக் கழிச்சல் வயிற்றுக் கழிச்சலின் கீழும் பார்க்க வாந்தி பேதி இது காணு முன் (உண்டாகும் வயிற்றுக் கழிச்சலுக்கு) படிக்காரத் தூளைக் கொடுக்கவும். மேற்படி வியாதி அதிகரிக்குமாகில் உடனே நல்ல அபினின் மாத்திரைகளை கொடுத்து வயிற்றின் மேல் முழுதும் கடுகு போலிட்டிசை காரமாய்ச் செய்து கட்டவும். அல்லது நோயாளி மிகுந்த பலவீனமாயிருக்கில் நெஞ்சின் இடது பக்கத்தில் வைத்துக் கட்டவும். கால், கைகளிலும் திரேகத்திலும் மற்ற ஸ்தலங்களிலும் உப்பையாவது மணலையாவது வறுத்து கிழி கட்டி இடைவிடாமல் ஒற்றிடம் கொடுக்கவும். நோயாளியை கூடிய மட்டும் அதிகமாய் அலைவில்லாமல் வைத்திருப்பதில் ஜாக்கிரதையாய் இருக்கவும். இந்த தருவாயில் சுக்கு குடிநீரை மிகுதியாய்க் கொடுத்து நோயாளி தனக்கு வேண்டிய மட்டும் குளிர்ந்த ஜலத்தை குடிக்க வேண்டும். முதல் ஒன்றிரண்டு தரம் குடித்து வாந்தியாய் போய் விட்டால் போகட்டும். பானத்தை தொடர்ந்து குடிக்கப் பண்ணி மேற் சொன்ன மாத்திரைகளையும் விடாமல் தின்னவும். சுக்கு நாரி புலத் தயிலம் ஐந்தாறு சொட்டு சீனியில் கலந்து உட்கொண்டால் சில வேளை வாந்தியை திட்டமாய் நிறுத்தும். ஒரு மணி நேரத்துக்கிடையில் அவசியமானால் அதை இரண்டு தரம் திரும்பக் கொடுக்கலாம்.

வாந்தி பேதி உண்டாயிருக்கும் பொழுது யாருக்காவது சுகக் கேடு தோன்று மாத்திரமே. அவசரமாய் ஔஷதத்துக்கு வரும்படியாய் யாவருக்கும் தெரியப்படுத்தவும்.

வாந்தி ஆரம்பத்தில் ஔஷதத்துக்கு வரப் பட்டவர்கள் சிலமணி நேரஞ் சென்று வரப்பட்டவர்களைப் பார்க்கிலும் அதி-சீக்கிரம் வடைய இடமுண்டு.

பிரசவமான பின் உண்டாகும் இரத்தப் பாச்சல், மூல முளையினின்று உண்டாகும் இரத்த பாச்சல், முறிவுகளில் நின்று உண்டாகும் இரத்த பாச்சல் இவைகளுக்கு அதினதின் பிரிவின் கீழ் பார்க்கவும். ~~கொடிவேலியால்~~

<u>கொடிவேலியால் தோலின் மேல் கொப்பளிக்கப் பண்ணும் விதம்.</u>

கொடிவேலியின் கீழ் பார்க்கவும். தோலின் மேல் எந்த விதமாய் கொப்பளித்திருக்கிறும் அதின் மேல் புதிய வாழைக் குருத்திலையும் வைத்துக் கட்டுவது நலம். முதலாவது இரண்டு நாளைக்கும் இலையில் மிருதுவான மேற் பக்கத்தை தோலின் மேலிட்டு மற்ற ~~நா~~ நாளில் அதின் அடிப்பக்கத்தை இடவும். இப்படி புண் வாசியாகிற மட்டும் இடவும். சாதாரணமாய் ஐந்து நாளில் கொப்பளமான புண் வாசியாகும்.

பருக்கள், விப்புருதிகளுக்கு எப்படி ஔஷதம் செய்வதோ அப்படியே ஒற்றிடம் இடவும்: நவாச்சாரத் தண்ணீர் விடவும். மாவு போலிட்டால் அல்லது வெந்த ஈருள்ளிப் போல்ட்டிஸ் வைத்துக் கட்டவும். வலியும் சிவப்பு நிறமும் உண்டாயிருந்தால் மாத்திரமே ~~ஒவ~~ அட்டைகளைவிடலாம். இல்லாவிட்டால் அவைகள் அவசியமில்லை. நாட்டு நன்னாரி வேர் உள்ளுக்குக் கொடுக்கவும். இதுவு மந்த விர சர்க்கரையும் மஞ்சள் நிறமான சவுக்காரமும் சமன் எடை எடுத்து ஒன்றாய்ச் சேர்த்து சீலையில் தடவி பருவின் ~~மேல்~~ இடுகிறது. அதிக உபயோகமாயிருக்கும்.

<u>பக்கப் பிழவைகள்</u> :-

இவைகள் உண்டாகும் ஆரம்பத்தில் சுடு தண்ணீர் ஒற்றிடம் இடவும். வலியும், சூடும் மிகுதியா யிருக்கில் அ அல்லது ய அட்டைகளை வீக்கத்தின் மேல் அல்லது அதின் ஓரத்தைச் சுற்றி விடவும். அரிசி மாவு போலிட்டிசை வைத்துக் கட்டவும். நித்திரைக்கு விரோதமாய் வலி கடினமாயிருக்கில் அபின் கொடுக்கவும்.

கீழ் சொல்லியிருக்கும் விவரங்கள் போல ஜாக்கிரதையாய்ச் செய்ய வேண்டும். அவை எவை எனில் பிழவை உடைந்து புண்ணுல் அதின் மேல் கள்ளுப் போல்ட்டிஸ் வைத்துக் கட்டி தினம் இரண்டு தரம் அதின் மேல் தண்ணீரை உயரமாய் விடவும். இப்படிச் செய்வதினுல் அதிலிருக்கும் அறு வேறு பட்டு வந்து விடும். புண் மிகவும் கெட்ட நாற்றமுள்ளதாயிருந்தால் அடுப்புக் கரி போலட்டிசை கள்ளுப் போலிட்டி சுக்கு பதிலாய் வைத்துக் கட்டி வெங்காரத் தண்ணீரால் புண்ணை தினம் தோறும் கழுவவும். புண்ணின் நடுவிலிருக்கும் அசறு வருமட்டும் இந்த பிரயோகத்தை செய்து அதின் பின் மெழுகு பிளாஸ்திரியாவது புண்களுக்கான வேறு சில ஔஷதங்களாலாவது இடவும். இந்த வியாதி முழுதிலும் முக்கியமாய் உண்டாக ஆரம்பித்த பின் நோயாளிக்கு இரைச்சியும், நன்னாரிக் கசாயமாவது வேப்பம் பட்டையாவது சாந்த உஷ்ணமாயுள்ள ஔஷதங்களும் கொடுத்து பலத்தை திரட்சப் படுத்தவும். இந்தப் பருக்களை அவைகளின் வீக்கம் முழுதிலும் இவ்விதமாய்க் கருவியால்க் கீரி விட அவசியமாயிருக்கின்றது. ஆனுல் இது ஒரு சரியான வைத்தியரின் உதவியன்றி செய்யக்கூடாது. ஏனெனில் அனேக விதமான கட்டிகள் நிசமான பின் வையாயிராமலிருந்தும் அவைகளை பிளவை யென்றே சுதேசிகள் சொல்லுகுருர்கள். அதினுல் இப்படி தப்பிதமான கட்டிகளை மேற் சொன்ன மாதிரியாய்க் கீரினுல் மிகவும் பொல்லாங்கு சம்பவிக்கும்.
குடலில் அதிகமான வலி இதற்கு கடுகு போலிட்டிஸ் வைத்துக் கட்டவும். அல்லது சுடு தண்ணீர் ஒற்றிடம் இடவும். உள்ளுக்கு அபினுவது, பெருங்காயமாவது, சுக்கு குடிநீராவது, கிராம்புக் குடிநீராவது கொடுக்கவும்.
குணம்:- வாய்வின் கீழும் பார்க்க வேண்டும். ஆசனத்தின் வழியாய்க் குடல் தள்ளுதல் இதற்கு உடனே தள்ளின குடலை திரும்ப உள்ளுக்குச் செலுத்தின பின்பு மாசக்காயின் தூள் சேர்த்த பிளாஸ்திரியை பவுனத்தின் மேல் தடவவும். அல்லது படிக்காரத் தண்ணீரை இடவும். இந்தப் படிக்காரத் தண்ணீர் குழந்தைகளுக்கு நன்றாய் தகுந்ததா யிருக்கிறது. ~~மலபந்தம்~~

<u>மலபந்தம்</u> :-

ஆமணக்கெண்ணெய் கரிய போளம் நிலவாகைக் குடிநீர் கடுக்காய் கசாயம், நேர்வாள மாத்திரைகள் இவைகள் எதாவது கொடுக்கலாம். குழந்தைகளுக்கு ஆமணக்கெண்ணெயு

காக்கா கொல்லி விரையை கஞ்சாத் தின்று இதற்கு முதலாவது துரிசை வாந்திக்குக் கொடுத்து அப்புறம் மாயக் காயின் கசாயத்தை மிகுதியாய்க் கொடுக்கவும். பிருயமானவர்களின் வயிற்று 'வலி கடினமான வயிற்று வலி இதற்கு சொல்லியிருக்கிறது போல் அபினை உடனே கொடுக்கவும். வயிற்றின் மேல் சுடு தண்ணீர் ஒற்றிடம் கொடுக்கவாவது கடுகு போல் பட்டிசை பெரிதாயும் காரமாயும் செய்து வைத்து கட்டாவது செய்யவும். இதுவுமன்றி உள்ளுக்கு காயத்தையாவது கிறம்புக் குடிநீரையாவது, சுக்குக் குடி நீரையாவது அல்லது காயத் தண்ணீரையாவது கொடுக்கவும். சுடு தண்ணீரில் உட்கார்ந்து குளிப்பது சில சமயத்தில் மிகுந்த பிரயோசனமாயிருக்கும். பிருயமானவர்களுக்கும் குழந்தைகளுக்கும் வலி நின்ற பின் ஆமணக்கெண்ணெய்யைக் கொடுக்கவும். யாதொரு தெளிவான காரணமின்றி பிரயமானவர்களின் உண்டாகும் சன்னி இழுப்பு மேல் குளிர்ந்த ஜலத்தை உயர்த்தி விடவும். கடுகு போலட்டிசைக் காரமாய் செய்து பாதங்களில் வைத்துக் கட்டவும். பேதி போகும்படியாய் ஒரு நேர்வாள மாத்திரையையும் கொடுக்கவும். மிகுந்த சன்னி யிழுப்புக்கு ஏதாவது நஞ்சு பதார்த்தம் தின்றதினால் உண்டானால் துரிசையாவது குரிஞ்சாவையாவது வாந்திக்குக் கொடுத்து வயிற்றை சுத்தி செய்து அப்புறம் அவசரமானால் மேற் சொல்லியிருக்கிறபடி ஔஷதம் செய்யவும். பிரசவ வேதனை சமயத்தில் உண்டாகும் சன்னி இழுப்புக்கு நெற்றிப் பொட்டு ஒவ்வொன்றிலும் ஆறு அட்டை வீதம் துரிதமாய் விடவும். கடுகு போலட்டிசைக் காரமாய்ச் செய்து காலின் கெண்டைச் சதைகளிலும் பாதங்களிலும் வைத்துக் கட்டி குளிர்ந்த மருந்து நீராவது, குளிர்ந்த காடியும் ஜலமுமாவது தலையில் விட்டு நனைத்து வைக்க வேண்டும். சூடான மாத்திரைகளில் ஒன்றிரண்டாவது வெங்காரமும், கருவாயுமாவது தலையில் விட்டு நனைத்து வைக்க வேண்டும். சூடான மாத்திரைகளில் ஒன்றிரண்டாவது வெங்காரமும் கருவாயுமாவது கொடுத்து அதின் பின் ஒரு பேதிக்குக் கொடுக்கவும். குழந்தைகளின் ஜன்னி இழுப்புக்கு குழந்தையை சுடு தண்ணீரில் உட்கார வைத்து குளிப்பித்து தலை மேல் குளிர்ந்த ஔஷத நீராவது குளிர்ந்த ஜலமாவது நனைத்திட்டு காயத்தைக் கொடுத்து, பிறகு ஆமணக்கெண்ணெய்யைக் கொடுக்கவும். ஒன்றிலும் தீராமல் நிலை கொண்ட பிருயமானவர்களின் இருமல் இதற்கு பெருங்காயமாவது, குரிஞ்சாவாவது கொடுக்கலாம்.

அல்லது

ஊமத்திலையில் சற்று பத்திரமாய் புகை குடிக்கவும். மேற்படி வியாதி வயது சென்றவர்களுக்கு உண்டானால் வால்மிளகு கொடுக்கவும். சுவாச முட்டல் அதிகமாக யிருந்தால் சுடு தண்ணீர் ஒற்றிடம் நெஞ்சின் மேல் இடவும். கடுகு போலிட்டி-சாவது மேற்படி சுவாச முட்டல் மிகவும் கடினமாயிருக்கில் ஒரு கொப்பள பிளாஸ்திரியாவது வைத்துக் கட்டவும். இரத்தத் தருவாயில் நவாச்சாரத்தை உள்ளுக்குக் கொடுக்கவும். குழந்தைகளின் இருமலுக்கு முதலாவது அதிமதுரம் சேர்ந்த ஔஷதத்தைக் கொடுத்து இதில் பிரயோசனமில்லாவிட்டால் காயமாவது வெங்காயப்பாவு ஆவது கொடுத்து பார்க்கவும். இதுவுமன்றி சூடத் தயிலத்தை வெதுப்பிக் கொண்டு நெஞ்சிலும், தொண்டையிலும் இராத்திரி படுக்கப் போகும் போது நன்றாய்த் தேய்க்கவும். குழந்தைகளில் மிகுதியாய் சுவாச முட்டுதலுண்டாயிருந்தால் சுடு தண்ணீர் ஒற்றிடத்தை சூடத் தயிலம் தேய்க்கு முன் இடவும். இதுவு மன்றி நாட்டுக்காரர் செய்கிற முறைப் போல நெஞ்சில் வெற்றிலையை இடுகிறது. மிகுந்த பலனைக் கொடுக்கும். அது செய்வது எப்படி எனில் வெற்றிலைகளை ஒவ்வொன்றாய் நெருப்பில் வாட்டி அதில் தேங்காய் எண்ணெய்யாவது, நல்லெண்ணெயாவது, ஆமணக்கெண்ணெயாவது தடவி நெஞ்சில் அடுக்காய் இடவும். இப்படிச் செய்வதில் உடனே சவுக்கியம் கொடுக்கும். யாதொரு பொல்லாங்கும் செய்யாததால் செய்து பார்க்கலாம்.

நேர்வாள வித்தையாவது, காட்டாமணக்கு வித்தையாவது, ஆமணக்கு வித்தையாவது நஞ்சாகத் தின்றல்

உடனே பிழிந்த எலுமிச்சஞ் சாற்றை மிகுதியாய்க் கொடுக்கவும். இதைக் ~~கொ~~ கொடுப்பதினால் கடினமான பேதியும், வாந்தியையும், வயிற்று வலியையும் நிறுத்தும். பிறகு கொஞ்சம் நல்ல ஆமணக்கெண்ணெய்யை பேதிக்காகக் கொடுக்கவும். ~~ஊமத்தை நஞ்சாக~~

ஊமத்தை நஞ்சாகத் தின்றல்: இதின் வித்து, காயையாவது, மற்றெந்த பக்கத்தையாவது நஞ்சாகத் தின்றால் ~~இதின்~~ துரிசை வாந்திக்குக் கொடுத்து வாந்தியானபின் மாயக்காயின்

கசாயத்தை மிகுதியாய்க் கொடுக்கவும். இப்படி வயிற்றைச் சுத்தி வருத்தின பின் பயித்திய புலப்பமாவது :போதகக் கேடாவது உண்டாயிருந்தால் தலை மேலும் முதுகெலும்பின் மேலும் குளிர்ந்த ஜலத்தை உயர்த்தி விடவும் இதில் குணம் காணவிட்டால் ஒரு கொப்பளப் பிளாஸ்திரியை பிடரியில் வைத்துக் கட்டவும். இதற்கெல்லாம் பிராயமானவர்களுக்கு ஒரு நேர்வாள மாத்திரையைக் கொடுத்து குடல்களை சுத்தம் செய்யவும். நோயாளியைக் கூடிய மட்டும் பல விதத்தில் விழிப்பாயும் நடத்தி வைக்க வேண்டும். மேற்படி துர்லக்ஷணங்கள் ஊமத்தின் புகையைக் குடித்ததினால் சம்பவிக்கில் மேற் சொன்னது போல குளிர்ந்த ஜலம் விடுகிறது. கொப்பளம் பண்ணும் பிளாஸ்திரியை வைத்துக் கட்டுகிறது. ஒரு பேதிக்குக் கொடுத்து வேண்டியிருக்கிறது. வாந்தியாக வேண்டிய மருந்து கொடுக்க வேண்டியதில்லை. நஞ்சினுடைய இலட்சணங்கள் இரண்டு, மூன்று நாள் வரையும் உண்டாயிருந்து சுகப்படும். எந்தக் காரணத்தாலாவது உண்டாகும் பல்வீனத்துக்கு சிரியாத்துக் கசாயமாவது கொடுக்கவும். கண்ணிமையின் உட்பக்கமும், நாவும் மிகுதியாய் வெளுறியிருந்தால் அன்ன பேதியும் கோழிக் குஞ்சின் கசாயமாவது, நாட்டு நன்னாரியாவது, சூரம்புக் குடிநீராவது, வேப்பம் பட்டை கசாயமாவது கொடுக்கவும். கண்ணிமையின் உட்பக்கமும் நாவும் மிகுதியாய் வெளிறியிருந்தால் அன்ன பேதியும், கோழிக் குஞ்சின் கசாயமாவது, ஆட்டிறைச்சியின் கசாயமாவது தினம் தோரும் கொடுக்க வேண்டும். தினந் தோரும் காலையில் அப்போது கறந்த ஆவின் பாலை குடித்தால் பலனுண்டாம். ஜுரம் வாசியான பின் உண்டாகும் பலவீனம் ஜுரத்தின் கீழ்ப் பார்க்கவும்.

<u>நீரழிவு</u> :-

இது சரியான வைத்தியனால் ஔஷதம் செய்யாமல் சுகப்படுவதரிது. ஆனால் ஆரம்பத்தில் நோயாளி பலமும் தோல் வரண்டு முற முறப்பாயிருக்கில் சுடு தண்ணீரில் ஆவியை மேல் கொள்ளுவதினால் மிகுந்த பலனுண்டாம். மூத்திரம் குறையும் படியாய் படிக்காரமாவது, சுண்ணாம்புத் தண்ணீராவது கொடுக்கவும். நல்ல மாமிசம் தின்னும் சோற்றைக் குறைத்து சாப்பிடவும். இப்படி செய்யுமளவில் கடை அபினில் ஒரு கிரெயினை படுக்கும் போது பிராயமானவர்க்கு கொடுக்கவும். வயிற்றுக் கழிச்சல், வாந்தி பேதி முன் உண்டாகும் கழிச்சலுக்கு படிக்காரத் தூளைக் கொடுக்கவும். நெடு நாளாயிருந்தாலாவது ஜுரம் கூடியில்லாமலாவது இருந்தால் காசுக் கட்டியாவது மாயக்காயாவது மாதளம் பழத் தோலியும் கசாயமாவது வில்வ சர்பத்தாவது இஸ்கோல் விரையை அல்லது துரிசைக் கொடுக்கலாம். இரை குடல் புளிப்புக் கூடியிருக்கில் சுண்ணாம்புத் தண்ணீரைக் கொடுக்கவும். மேற்படி கழிச்சலுக்கதிகமாய் சாப்பாடு தின்றதினால் ஜீரணமாகாத சாப்பாட்டினாலாவது உண்டானால் வாந்தி மருந்தாலாவது பேதிக்கு ஆமணக் கெண்ணெய்யாவது கொடுக்கவும். இந்தப் படி செய்வதினால் காரணம் நீங்கி வியாதி சம்பவிக்க மாட்டாது. ஜுரமும் கூடியிருந்தால் குரிஞ்சாவும் ஏகோல் விரையின் கசாயமும் கொடுக்கவும். கொழுத்த கூவமாவின் கஞ்சியை கொடுக்கிறது: பத்தியத்துக்கு நல்ல வஸ்துவாயிருக்கின்றது. குழந்தைகளின் வயிற்றுக் கழிச்சல் முக்கியமாய் குழந்தை அஜீரணமாகும் போஜனம் செய்திருந்தால் முதலாவது கொஞ்சம் ஆமணக்கெண்ணெய்யைக் கொடுக்கவும். அப்புறம் காசுக் கட்டியாவது, வில்வ சர்ப்த்தையாவது கடினமான வயிற்றுக் கழிச்சலுக்கு துரிசைக் கொடுக்க வேண்டும். இவைகளைக் கொடுக்கிறதுந் தவிர சுண்ணாம்புத் தண்ணீரை தினந் தோறும் கொடுக்கவும். சிறு பிராயமும் பலமாயுமிருக்கிறவர்களில் உண்டாகும் நீர்க் கோவை ஆரம்பத்தில் நேர்வாள மாத்திரைகளைப் போலான கடிய பேதி ஔஷதங்களை கொடுக்கவும். ~~இரண்டாம் பி~~

இரண்டாம் பிரயோகம் :- வெடியுப்பையாவது ஆனை நெருஞ்சியையாவது கொடுக்கவும். வியாதியின் ஆரம்பத்திலே நோயாளி பலவீனமாயிருக்கும் போது அபிரி சுடு தண்ணீராவியில் வேது பிடித்து வேர்வையை அதிகமாய் உண்டாக்க வேண்டும். இது ஒரு கிழமையில் இரண்டு தரம் செய்யலாம். மிகுந்த பலவீனமாய் வெளிறின தேகத்தீரர்கள் உங்களுக்கு உண்டாகும் நீர்க் கோவைக்கு அன்ன பேதி கொடுக்கவும்.

<u>இரத்தக் கடுப்பு :-</u>

இதின் ஆரம்பத்தில் ஸ்கோல் விரையின் கசாயமும் குரிஞ்சா என்னும் ஔஷதமும் வில்வஊர்பத்தும் கொடுக்கவும். சுண்ணாம்புத் தண்ணீரும் பிரயோசனப்படும். இதில் கண்ட வியாதி அதிகரித்திருக்கும் சமயத்தில் ஜீரமில்லாமலும் நோயாளி பலவீனமாயிருக்கில் மாசக் காயின் கசாயமாவது, துருசாவது, மாதளம் பழத் தோலின் கசாயமாவது கொடுக்கவும். வில்வ சர்பத்தும் கூட தொடர்ந்து குடிக்க கொடுக்கலாம். எல்லாவித இரத்தக் கடுப்புகளிலும் வயிற்றை சுற்றி பிளானலையாவது, கம்பிளியையாவது வீதியில் இருக்கிக் கட்டவும். இது உபயோகமுள்ளதாய் இருக்கின்றது. ~~குழந்தைகளின் இரத்தக் கடுப்~~

<u>குழந்தைகளின் இரத்தக் கடுப்பு :-</u>

இதற்கு குழந்தைகளின் வயிற்றுக் கழிச்சலுக்கு சொல்லியிருக்கிற ஔஷதங்களை செய்யவும்.

<u>காது வலி :-</u>

அபினியாவது வெள்ளுள்ளிச் சாற்றையாவது காதின் வெளித் துவாரத்தில் விடவும்.

<u>ஆனைக் கால் :-</u>

இதில் ஜீரத்தை நிறுத்த வெள்ளை பாஷாணத்தையாவது குளிர் சுர மருந்தில் காட்டிய மற்றொரு ஔஷதமாயினும் கொடுக்கவும்.

<u>நாட்டுக் கண்ணோய் :-</u>

படிக்காரத் தண்ணீரை அல்லது துருசின் தண்ணீரை விடவும். ஒன்றிலுந் தீராத கண் நோய்க்கு வங்காள பச்சை சேர்த்த பளாஸ்திரியை கண்ணிமைகளில் தடவவும். கண்கள் சிவப்பாயிருக்கில் அட்டைகளை நெற்றிப் பொட்டுகளில் கடிக்க விடவும்.

<u>கண் வலிக்கு :-</u>

அபின் புகையை கண்ணில் பிடிக்கவும். கண்ணில் அடிபட்டிருந்தால் போலட்டிசைக் கட்டவும். அல்லது நவாச்சாரத் தண்ணீரை விடவும்.

<u>முகவலி :-</u>

சுக்கு போலட்டிசையாவது கடுகு போல்ட்டிசையாவது வலியான ஸ்தானத்தில் வைத்து கட்டவும். ஊமத்தின் பளாஸ்திரியாவது தடவவும். உள்ளுக்கு நவாச்சாரத்தைக் கொடுக்கவும். வலி தினந்தோறும் ஒரே சமயத்தில் வருகில் அன்ன பேதியைக் கொடுக்கவும்.

<u>மூர்ச்சை :-</u>

இதற்கு குளிர்ந்த ஜலத்தைத் தலை மேல் ஊற்றவும். அல்லது அதை முகத்திலும், கழுத்திலும் வாரி அடிக்கவும். காரமான வாசனையுடைய வஸ்துக்களையும் நாசிகளில் பிடிக்கவும். இது செய்த பின்னும் மயக்கந் தெளியாவிட்டால் கடுகு போலிட்டிசை பாதங்களில் வைத்துக் கட்டவும். சற்று சவுக்கியமானவுடன் காயம் சேர்த்த அவுஷதத்தை ஒரு தரத்துக்குக் கொடுக்கவும்.

<u>ஜீரங்கள் :-</u>

எல்லா ஜீரங்களிலும் முதலாவது ஒரு பேதிக்கு ஆமணக்கெண்ணெயாவது, நிலவாகையாவது, கடுக்காயாவது நோயாளி பலமும் பிராயமும் உள்ளவனுக்கு நேர்வாள மாத்திரையாவது கொடுக்க வேண்டும். கஞ்சி மாத்திரம் கொடுத்து பத்தியமாயும் திரேகத்தைக் குளிர்ச்சியாயும் அமைதலாயும் வைத்து வெடியுப்பு ஜலத்தில் கலந்ததையும் கொடுக்கவும். தாகமுந் தணியும் பொருட்டு எலுமிச்சன் சாற்றின் சர்பத்தாவது அரிசிக் கசாயமாவது குடிக்கக் கொடுக்கவும். சீலை துண்டுகளை குளிர்ந்த ஜலத்தில் நனைத்து தலைமேல் எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும். வாய் மிகுதியாய் எலுமிச்சம் பழத்தைத் துண்டாய் அறுத்து வாயிலிட்டு சப்பவும். அதிகமாய் தலைவலி உண்டாயிருக்கில் அட்டைகளை விடவும். தலைமேல் வெடியுப்பு ஜலத்தை விட்டு நனைத்து வைக்கவும். நெஞ்சிலாவது அடி வயிற்றி

கடினமான வலியுண்டாகில் வலியான ஸ்தானத்தில் அட்டைகளை விடவும். இதிலும் வசியா விட்டால் கொப்பளிக்கும். பிளாஸ்திரியை வைத்துக் கட்டவும். ஜீரம் அனேக நாள் வரையிருந்து பின் பைத்தியந் தலைப்ப முண்டாகில் உள்ளுக்கு சூடத்தைக் கொடுத்து வெள்ளுள்ளி போலிட்டிசையாவது, கடுகு போலிட்டிசையாவது பாதங்களில் வைத்துக் கட்டவும். தலையை வெடியுப்புத் தண்ணீரால் நனைத்து வைக்கவும் வேண்டும். நோயாளி மிகுந்த ஆயாசமாயிருந்தால் சூடத்தைக் கொடுக்கவும். ஜீரம் விட்டு நோயாளி பலவீனமாயிருக்கும் போது கிரியாத்துக் கசாயமாவது வேப்பம் பட்டைக் கசாயமாவது நாட்டு நன்னாரியாவது கொடுத்து அப்பொழுது கோழிக் குஞ்சின் அல்லது ஆட்டு இறைச்சியின் கசாயத்தை தினந் தோறும் குடிக்கவும்.

ஜன்னி வலி:-

ஜன்னி வலியின் கீழ் பார்க்கவும்.

ஸ்திரிகளிலுண்டாகும் சூதக ஜன்னி வலி:-

இதற்கு அபிரி குளிர்ந்த ஜலத்தை முகத்திலும், கழுத்திலும் தடவி பெருங்காயம் சேர்த்த ஔஷதத்தைக் கொடுத்து பிறகு ஆமணக்கெண்ணெய் பேதிக்குக் கொடுக்கவும். வாயு: காயத்தைக் கொடுத்து சுக்குக் குடிநீரை தனியேயாவது ஜீனுப்புத் தண்ணீருடனேயாவது கொடுக்கவும்.

வாயு கடினமாயிருக்கில் வயிற்றின் மேல் ஒரு கடுகு போலிட்டிசை வைத்துக் கட்டவும். குழந்தைகளுக்கும் சதகுப்பைக் குடிநீரையாவது கொஞ்சக் காயச் சேர்வை கொடுக்கவும்.

துர்மாமிசம்:-

பொரித்த படிக்காரத்தையாவது, துரிசையாவது மீதே தொட்டு வைக்கவும்.

ஆண் பெண் குறிகளில் தினவு - தினவின் கீழ் பார்க்கவும்:-

விசை நரம்பிலுண்டாகும் வீக்கங்கள்: இதற்கு நவாச்சார ஜலத்தை இடை விடாமலிட்டு. கொஞ்சம் அபின் தயிலமாவது, சூடத் தயிலமாவது தினத்தில் இரண்டு தரந் தேய்க்கவும். நவாச்சாரத்தையும் உள்ளுக்குக் கொடுக்கவும்.

மேக வெள்ளை, நெடு நாட் சென்ற மேக வெள்ளை, வாலமிளகாவது மாயக்காயாவது உள்ளுக்குக் கொடுக்கலாம்.

மேக வெள்ளை: முதலாவது:

ஒரு பேதிக்கு நிலவாகையாவது, ஆமணக்கெண்ணெய்யாவது, கடுக்காயாவது கொடுத்து வெடியுப்பு நீராவது ஆனை நெருஞ்சிக் குடிநீராவது மூத்திரம் விடும் போதிருக்கும் சூட்டைத் தணிக்கும்படியாய்க் கொடுக்கவும். அப்புறம் வால் மிளகாவது, மாயக்காயாவது நல்ல மிளகாவது கோல் விரையாவது கொடுக்கவும்.

சில மேக வெள்ளைக்கு படிக்காரம் வெளியிலிடவும். லிங்கம் ராத்திரியில் முறைப்பாகிறதை நிறுத்த சூடத்தைக் கொடுக்கவும்.

கினி வேராம் என்னும் தோலியிலுள் உண்டாகும் ஓர் விதப் புழு இதன் தலை வெளியே காணும் பொழுது அதை ஒரு துண்டு சீலையால் சுற்றி வைத்து அதின் மீதே ஊமத்தின் போலிட்டிசையாவது, அரிசி போலிட்டிசையாவது வைத்துக் கட்டவும். இவ்விரண்டில் ஊமத்தின் போலிட்டிஸ் மிகுந்த நலம். மேற்படி புழுவை அற்றுப் போகாமல் தினந்தோறும் கொஞ்சம் கொஞ்சமாய் பத்திரத்துடன் இழுத்திழுத்து பத்திரத்துடன் சுற்றவும். இந்த புழு இருக்கும் காலையாவது பக்கத்தையாவது ஓடுந் தண்ணீரிலாவது ஒரு பாத்திரம் ஜலத்திலாவது வைத்துக் கொண்டு இழுத்தால் புழு அதிக சீக்கிரமாய் வந்து விடும். புழுவை வெளியில் இழுக்கும் போது அற்றுப் போகாமல் செய்வது பெரிய காரியமாயிருக்கிறது. அற்றுக் போகில் அந்தப் பக்கத்தில் விப்புருதிகள் உண்டாகும். அப்பொழுது விப்புருதியின் கீழ் சொல்லியிருக்கிறது போல பிரயோகிக்கவும். வலி மிகுந்து நித்திரைக்கு விரோதமாயிருக்கில் அபினைக் கொடுக்கவும். பலர் வீரணமாயு மிருந்து வாயும் குருக்கிறதற்கு காசுக் கட்டியாவது, படிக்காரமாவது

வெளியில் இடலாம்.

பலகாரணங்களினால் உண்டாகுந் தலைவலி இது மல பந்தத்தினால் உண்டானால் ஆமணக்கெண்ணெயாவது, நிலவாகையாவது, கடுக்காயாவது நோயாளி பலத்த பிராயமானவனாகில் நேர்வாள மாத்திரையும் கொடுக்கவும். அஜீரணத்தினாலுண்டானால் சுண்ணாம்புத் தண்ணீர் பாலில் சேர்த்தாவது சுக்குக் குடிநீரில் சேர்த்தாவது குடிக்கவும்.

மூல முளையில் நின்றி போகப்பட்ட இரத்தம் நின்று ஏதுவாலானால் அட்டைகளை பவன வாயின் அருகில் விடவும். ஸ்திரிகளில் மாத விடை நின்ற ஏது வாலானாலும் அட்டைகள் தொடைகளில் விடவும். இவைகளில் சொல்லிய இரண்டு காரணங்களினால் உண்டாகும் சுர நோய்க்கு கரிப் போளத்தை உள்ளுக்குக் கொடுக்கவும். அன்றியும் கடினமான தலை வலிகளை நிறுத்தும் பொருட்டு செய்ய வேண்டிய மற்ற பிரயோகங்கள் எவை எனில் வலியின் பக்கத்தில் சுக்குப் போலிட்டிசை வைத்துக் கட்டினாலாவது பாதங்களில் கடுகு போலிட்டிசை வைத்துக் கட்டினாலாவது அட்டைகளை நெற்றிப் பொட்டுகளில் விட்டாவது கழுத்தின் பிடரியில் கொப்பளிக்கும் பிளாஸ்திரியை வைத்துக் கட்டினாலாவது சவுக்கியப்படுத்துவதற்கு ஏதுவாயிருக்கும்.

<u>நெஞ்செறிவு</u>:-

சுண்ணாம்புத் தண்ணீரை கொடுக்கவும்.

<u>விக்கல்</u>:-

கடினமாயிருக்கில் அபின் தயிலத்தை முதுகெலும்பின் மேல் நன்றாய்த் தேய்க்கவும். பெருங்காயத்தை உள்ளுக்குக் கொடுக்கவும்.

<u>கக்கிருமல்</u>:-

ஆரம்பத்தில் ஜீரமும் கூட உண்டாயிருந்தால் ஆமணக்கெண்ணெய்யும் குரிஞ்சாவையும் கொடுக்கவும். அதின் பிறகு ஜீரமில்லாதிருக்கும்போது படிக்காரமாவது, நவாச்சாரமாவது காயமாவது கொடுக்கவும். கடுகு போலிட்டிசை வைத்துக் கட்டவாவது அபின் தயிலத்தை முதுகெலும்பின் முழுதிலும் தேய்க்கவாவது வேண்டும்.

<u>அஜீரணம்</u>:-

ஆமணக்கெண்ணெயாவது, நிலவாகையாவது கொடுத்து மலத்தைப் போக்கி வயிற்றை சரிப்படுத்தி வைத்து கிரியாத்தையாவது கிரும்புக்குடி நீரையாவது தோட்டு நன்னாரியாவது கொடுக்கவும். நாவில் கெட்ட சுவையுண்டாயிருக்கில் சுண்ணாம்புத் தண்ணீரை கொடுக்கவும். ஆண், பெண் குறிகளில் தினவு கடினமாயிருக்கில் வெங்காரம் அல்லது சுண்ணாம்புத் தண்ணீரை வெளியில் இட்டு உள்ளுக்கு சூடத்தைக் கொடுக்கவும். சுடு தண்ணீரின் ஆவியில் உட்கார்ந்திருந்தாலும் திருப்தியான சவுக்கியத்தைக் கொடுக்கும்.

<u>சிரங்கு</u>:-

கெந்தகப் பிளாஸ்திரியை நன்றாய்த் தொடுத்து தேய்க்கில் வாசி பண்ணும். இதினால் வாசியாகா விட்டால் துரிசின் தண்ணீரைத் தொட்டு இடவும்.

<u>முட்டு வீக்கங்கள்</u>:-

வீக்கத்தில் தொடும் பொழுது சூடும் வலியுமிருந்தால் வெடியுப்பை ஜலத்தில் கலக்கியாவது நவாச்சாரத்தை ஜலத்தில் கலக்கியாவது அதின் மேல் விடவும். படிக்கார ஜலத்தை விடுவதினாலும் சூடத் தயிலம் தினந்தோறும் இடுவதினாலும் பழைய முட்டு வீக்கங்களுக்கு மிகுதியாய் பிரயோஜனப்படும். ஒரு முட்டுக்கு அதிகம் வீங்கியிருக்கில் சுடு தண்ணீரின் வேது பிடிக்கவும்.

<u>பிரசவ வேதனை</u>:-

இதில் அதிகமாய் ஒன்றும் செய்யக் கூடாது. ஒன்றும் செய்யாமல் சும்மா விட்டு விடுகில் அதினால் அநேக நன்மை உண்டாகும்.

ஒன்றும் தெரியாதவர்கள் அதில் பிரவேசிக்கிறதினலே ஸ்திரிகள் இறந்து போவார்கள். பிரசவ வேதனை தாமதித்து நீடித்திருக்கில் வெங்காரத்தை கொடுத்து பிரசவமானபின் அதிக இரத்தப் பாச்சலுண்டாகில் குளிர்ந்த ஜலத்தை விடவும். பிரசவமான பின் ஆக வேண்டிய உதிரக் கட்டுகள் நின்றுவது குறைந்து போயாவது இருக்கில் அதைப் போக்கும்படியாய் சுடு தண்ணீரில் ஒற்றிடம் கொடுக்கவும். பிரசவத்தைச் சார்ந்து வரும் சன்னி வலி, சன்னி வலியின் கீழ் பார்க்கவும். பிரசவமான பின் வலி கடினமாயிருக்கில் அபினைக் கொடுக்கவும். அட்டை கடித்த காயத்திலல் நின்று உண்டாகும் இரத்தப் பாய்ச்சல், இரத்தப் பாச்சலின் கீழ் பார்க்கவும்.

அட்டைகளை கடிக்க விடுகிற முறை:-

சுட்டம்- வல்லாரரையை உள்ச்கும் வெளியிலும்மாய் பிரயோகிக்கவும். அல்லது வெள்ளைப் பாஷாணத்தைக் கொடுக்கவும். வலியை நிறுத்தி உறக்க முண்டாக்குவதற்கு அபினைக் கொடுக்கவும்.

இடுப்பு வலி: சூடத் தயிலமாவது, அபின் தயிலமாவது தேய்க்கவும்.

சிச்சிலுப்பை:-

இதின் ஆரம்பத்தில் ஆமணக்கெண்ணெய் ஒரு பேதிக்குக் கொடுத்து வியாதி சவுக்கியப் படு மட்டும் மலத்தை தினந்தோறும் போக்சி வைக்க வேண்டும். ஆனல் கடினமான பேதி ஔஷதங்களை கொடுக்கிறது பலவீனமும் பொல்லாங்கு முண்டாவதால் அவைகளைத் தள்ளி வைக்க வேண்டும். தாகத்தைத் தனிக்கும் பொருட்டு அரிசிக் கசாயமாவது குளிர்ந்த ஜலமாவது மிகுதியாய்க் கொடுக்கவும். திரேகத்தில் சொரி அதிகமாயிருக்கில் சுடு தண்ணீரால் திரேகத்தை நனைக்கவாவது நேர்மையான அசிசி மாவை தூவவாவது செய்யவும். இருமலுண்டானல் இருமலின் கீழ் சொல்லியிருக்கிற பிரகாரம் செய்துக் கொள்ளவும்.

முறைத் தப்பான சூதகம்:-

இதற்கு சுரிய போளமும் வெங்காரமும் கொடுக்கவும். சூதகம் நின்றிருக்கில் மேற்படி ஔஷதங்களையும் அன்ன பேதியும் கொடுக்க வேண்டும். சூதகம் அதிகமாயாவது நெடு நாளாயாவது போகில் படிகாரத்தையாவது மாம்பருப்பையாவது கொடுக்கவும். வாயுடை புண்கள் பிரயமானவர்களில் எலுமிச்சஞ் சாற்றை வாயிலிட்டு கொப்பளிக்கவாவது துரிசின் தண்ணீரை கொப்பளிக்கவாவது பல்லீரின் புண்களுக்கு சொல்லியிருக்கும் ஔஷதங்களில் ஏதாவது செய்யவும். குழந்தைகளிலும் சிறு பாலர்களிலும் வாயிலுண்டாகும் வெண் நிறமாகிய புண்களுக்கு வெங்காரமாவது, படிகாரமாவது, துரிசாவது உபயோகிக்கவும். ஆனல் இவைகளிலெல்லாம் வெங்காரம் மிகுந்த நன்மையாயிருக்கிறது.

முலைக் காம்பில் புண்:-

வெங்காரம் காசுக் கட்டியின் கசாயத்தில் தினம் இரண்டு தரம் புண்ணுள்ள ஸ்தலங்களில் கழுவவும். மேற்படி புண் வராமலிருக்கும்படி காசுக் கட்டியை பிரயோகிக்கவும். குதிரை எலும்பில் வீக்கங்கள்:- இவைகளிலுண்டாகும் வலியைப் போக்குவதற்கு ஊமத்தின் போலிட்டிசையாவது அதின் இலைகளையாவது வைத்துக் கட்டவும். எட்டிக் கொட்டையை நஞ்சாகத் தின்றல் காக்காய்க் கொல்லி விரையின் கீழ் சொல்லியிருக்கிறது போல் செய்யவும்.

அபினை நஞ்சாகத் தின்றல் ஊமத்தை நஞ்சாகத் தின்றதற்கு சொல்லியிருக்கிற பிரயோகங்களை எல்லாம் இதற்கும் செய்யவும். துரிசை உடனே வாந்திக்குக் கொடுத்து இரைக் குடலை சுத்தி செய்யவும். மாயக்காயின் கசாயத்தை கொடுக்கவும். இரை குடல் நன்றய்ச் சுத்தியான பின் எலுமிச்சை சாற்றைக் கொடுக்கவும். வியாதிக்காரன் படுத்துத் தூங்காமல் விழிப்பாயிருக்க வேண்டும். மற்ற பிரயோகங்களுக்கு ஊமத்தின் கீழ்ப் பார்க்கவும். திரேகத்தின் வெளிப் பக்கங்களில் எங்கேயாவது உண்டாகும் வலி இதற்கும் சுடுத் தண்ணீர் ஒற்றிடம் அபின் தயிலம் அல்லது சூடத் தயிலம் உபயோகமாயிருக்கும்.

<u>பக்க வாதம்</u>:-

கடுகை உள்ளுக்குக் கொடுத்து கடுகு போலிட்டிசை முதுகெலும்பின் மேல் வைத்து கட்டவும். காட்டாமணக்கின் வித்தை நஞ்சானத் தின்றால் நேர்வாள வித்தின் கீழ் பார்க்கவும்.

<u>மூல முளை</u>:-

இதற்கு மாயக்காயின் பிளாஸ்திரியை இடுவது நலம். அது சூடாயும் வலியுள்ளதாயும் இருக்கில் சுடு தண்ணீராவியின் மேல் உட்கார்ந்து பின்பு அரிசி மாவின் போலிட்டிசையாவது வைத்துக் கட்டவும். அல்லது வெங்கார பிளாஸ்திரியையாவது இடவும். மூலத்தில் நின்று மிகுதியாய் இரத்தம் பாய்கில் படிகார ஜலத்தை வெளியில் விட்டு உள்ளுக்கு அபினி அபினி படிக்காரத்தையாவது மாங்கொட்டைத் தூளையாவது கொடுக்கவும். யாருக்காவது மூல முளையில் நின்று இரத்தம் பாய்ந்து நெடு நாளாய்க் கஷ்டப் பட்டால் இரத்தம் கிரமத்தில் நின்று அதிகமாய்ப் போகாமலிருக்கில் அதை சடுதியில் நிறுத்த பிரயத்தினம் செய்வது புத்தியல்ல.. நஞ்சுகள், ஊமத்து, அபின் காக்காய்க் கொல்லி விரை, வெள்ளைப் பாஷாணம், எட்டிக் கொட்டை இவை கீழ் பார்க்கவும்.

<u>துன் மாமிசம்: துன் மாமிசத்தின் கீழ் பார்க்கவும்</u>:-

வாதம்: இதின்கூட ஜீரம் உண்டாயிருக்கில் வெடியுப்பை சுத்தி செய்து அபினை ராத்திரி படுக்கப் போகும் போது கொடுக்கவும். நெடு நாளாக யிருக்கும் வாதங்களுக்கு சூடனை யாவது சுக்குக் குடிநீராவது நாட்டு நன்னாரியையாவது கொடுக்கவும். அபினி சுடு தண்ணீரின் ஆவியைப் பிடிப்பது மிகவும் உபயோகமுள்ளதாய் இருக்கின்றது. வெளிப் பிரயோகமாய் அபினைத் தயிலத்தையாவது, சூடத் தயிலத்தையாவது, கெந்தகத் தயிலத்தையாவது இடவும். அல்லது ஊமத்து போலிட்டிசையாவது, கடுகு போலிட்டிசையாவது வைத்துக் கட்டவும். முட்டில் வீக்கமும் வலியுமா யிருந்தால் நவாச்சாரத் தண்ணீரையாவது விடவும். வெடியுப்புத் தண்ணீரையாவது விடவும். திரேகத்தை சீலைகளால் நன்றாய் மூடி வைத்திருப்பது மன்றி அவைகளால் உண்டாகுவதே அதெல்லாம் உபயோகமாயிருக்கிறது.

<u>படர் தாமரை</u>:-

இதற்கு வெங்காரம் மலந் தகரை பளாஸ்திரி நல்ல மிளகு, வங்காளப் பச்சை துரிசு இவைகளில் எதையாவது பிரயோகித்தாலும் அதை படர் தாமரையின் மேல் தினம் இரண்டு தரம் நன்றாய்த் தேய்க்கவும். வாயில் நீர் வடிதல் காசுக் கட்டியையாவது படிகாரத்தையாவது வெங்காரத்தையாவது ஜலத்தில் கலக்கி கொப்பளிக்கலாம்.

<u>பொருமு</u>:-

இதற்கு துரிசை வெளியிலிடவும்.

<u>கண்டமாலை</u>:-

இதற்கு வல்லாரையையாவது சுண்ணாம்புத் தண்ணீரையாவது உள்ளுக்குக் கொடுத்து அபினை வலி அதிகமாயிருக்கில் இராத்திரியில் கொடுக்கவும்.

புண்களுக்கு:- சுண்ணாம்புத் தண்ணீரையாவது வெளியிலிடவும். நல்ல சாப்பாடு செய்விக்கவும்.

இசுப் பிணி யென்றும் உள்ளுருப்பு பருத்தலுக்கு அன்ன பேதி ஔஷதத்தை வாங்கவும்.

<u>சுளுக்கு</u>:-

ஆரம்பத்தில் மிகுந்த வலியுண்டாயிருக்கில் சுடு தண்ணீர் ஒற்றிடமாவது அவசியமாகில் அட்டைகளையாவது விடவும். அப்புறம் நவாச்சாரத் தண்ணீரை விட்டு அதின் பின் அபின் தயிலத்தையாவது, சூடத் தயிலத்தையாவது படிகாரத் தண்ணீரையாவது இடவும். படிகார தண்ணீர் நெடு நாளாயிருக்கும் சுளுக்குகளுக்கு அதிகமாய்ப் பிரயோஜனப்படும். சுளுக்குண்டான பின் அந்தப் பக்கத்தை கொஞ்சம் நாளுக்கு கூடிய மட்டும் அசைதலாய் வைத்திருக்கும்படி நோயாளியை தக்கிதி செய்ய வேண்டும். இரை குடலில் புளிப்பு சுண்ணாம்புத் தண்ணீரை

கொடுக்கவும். சூரியனுடைய காந்தி பட்டு உண்டாகும் மூர்ச்சை இதற்கு குளிர்ந்த ஜலத்தை தலையிலும் முதுகெலும்பிலும் உயரமாய் விட்டு திரேகத்தை நன்றாய்த் தேய்க்கவும். இப்படி சுவரனை வருகிற மட்டும் செய்யவும். மூக்கில் காரமான வாசனை யுடைய வஸ்துக்களையும் பிடிக்கவும். நோயாளிக்கு சுவரணை வந்த பின் சுரமணையா யிருக்கில் அட்டைகளை நெற்றி பொட்டுகளில் விட்டும் சுரத்தின் கீழ் சொல்லியிருக்கும் மற்ற பிரயோகங்களை செய்ய வேண்டும்.

மேக வியாதி:-

ஆண் பெண் குறிகள் எதிலாவது புண் கண்டவுடன் அதின் மேல் துரிசைத் தாராள மாய் தொட்டு அல்லது நேர்மையாய் தூள் செய்து புண்ணின் மேல் தூவி அப்புறம் மாவ போலிட்டிசை வைத்துக் கட்டவும். காசுக் கட்டி தண்ணீரையும் விடவும். நாட்டு நன்னாரியாவது, சுண்ணாம்புத் தண்ணீரையாவது அல்லது இந்த ஔஷதங்களையாவது ஒன்றாய் கலந்தாவது உள்ளுக்குக் கொடுக்கவும். நெடுநாள்ச் சென்ற மேக புண்களுக்கு வல்லாரையை உள்ளுக்கும் வங்காளப் பச்சை பிளாஸ்திரியவாது புண்களுக்குச் சொல்லியிருக்கும் மற்ற மருந்துகளாவது வெளியிலுமாய்ச் செய்யவும். புண்ணில் அதிக வலியுண்டாயிருக்கில் அபினைக் கொடுக்கவும். எல்லாவற்றிலும் பெரிய காரியமாய் எண்ண வேண்டுவது என்ன வெனில் நோயாளிக்கு நாட்டு வைத்தியனால் கொடுக்கப்பட்ட இரச ஔஷதங்கள் கெடுதலை யுண்டாக்குவதால் அவைகளை தின்மைல் எச்சரிக்கை பண்ண வேண்டும்.

தொண்டைப் புண்:-

படிகார ஜலத்தையாவது மாதளம் பழத் தோலியின் கசாயத்தையாவது வாயில் விட்டுக் கொப்பளிக்கவும். ஒரு துண்டு வெடியுப்பையாவது காசுக் கட்டியையாவது வாயிலிட்டு கரையு மட்டும் வாயிலொதுக்கி வைத்துக் கொள்ளவும். எல்லாத் தொண்டைப் புண்களுக்கு சுடு தண்ணீரின் ஆவியை உள்ளுக்கு சுவாசம் வாங்கில் தொண்டையில் மேகப் புண் களுக்கு வங்காளப் பச்சை பிளாஸ்திரியை இடவும்.

பல்வலி:-

இதற்கு சூடத்தையாவது, காசுக் கட்டியையாவது, அபினையாவது பல்லினிடையில் வைக்கவும். இவைகளில் அபின் மிகவும் நன்று. சுக்கை சவைக்கவாவது பல் வலியாருக்கு பார்சத்தின் கன்னத்தின் மேல் கடுகு போலிட்டிசை வைத்துக் கட்டவாவது செய்யலாம். நவாச்சாரத் தண்ணீரை விட்டு வெள்ளுள்ளி போலட்டிசை வைத்துக் கட்டியும் வலி யிருக்கில் ஊமத்தின் போலட்டிசை அதின் மேல் வைத்துக் கட்டி அபினை ராத்திரியில் கொடுக்கவும். புண்கள் சாதாரணமான புண்களுக்கு மெழுகு பிளாஸ்திரியை துரிசின் தண்ணீரும் மாவுபோலட்டிசும் வேண்டும். இவைகளில் அதிக நாற்ற முண்டாயிருக்கில் அடுப்புக் கரி போலட்டிசை வைத்துக் கட்டி வெங்காரத் தண்ணீரை விட்டு தினம் தோறும் கழுவவும். அப்புறம் கடுகு போலட்டிசை வைத்துக் கட்டவும். இப்படி அசுசு நாற்றமுள்ள புண்களுக்கு படிகார பிளாஸ்திரி உபயோகமாயிருக்கின்றது.

வலி மிஞ்சு உறக்க மில்லா மலிருக்கில் அபினைக் கொடுக்கவும். புண்ணில் நின்று அதிக தண்ணீர் ஒடுமாகில் காசுக் கட்டி தண்ணீராவது கடுக்காய் பிளாஸ்திரியை யாவது சுண்ணாம்புத் தண்ணீரையாவது இடவும்.

புண் ஒன்றிலும் ஆராமலிருக்கில் துரிசினால் அதின் ஓரங்களில் தொட்டு புண் வெளிறின மஞ்சள் நிறமாயும் துவண்டு மிருக்கில் வேப்பம் போலட்டிசை வயித்துக் கட்டவும். மேக புண்களுக்கு மேக வியாதியின் கீழ் பார்க்கவும்.

எல்லா வகை புண்களுக்கும் நன்னாரியை உள்ளுக்குக் கொடுக்கவும். மூத்திரம் போகாமல் பிடித்திருப்பதில் அடி வயிற்றில் சுடு தண்ணீரில் ஒற்றிடம் கொடுக்கவும். அல்லது நோயாளி சுடு தண்ணீரில் உட்கார்ந்திருக்கவும். அபினை பவுனத் துவாரத்தினுள் செலுத்தி வெள்ளுள்ளி போலட்டிசை அடி வயிற்றில் வைத்துக் கட்டவும்.

உபஸ்தத்தில் நின்று ஜலம் போகிறதற்கு:-

மாதளம் பழத் தோலியின் கசாயம் கொடுக்கவும். மேக வெள்ளையின் கீழ்

வங்காளப் பச்சையை நஞ்சாகத் தினற்தற்கு கீழ் பார்க்கவும்.

வாந்தி நிற்கும் பொருட்டு கிரும்புக்குடிநீரையாவது சுக்கு குடிநீரையாவது உள்ளுக்குக் கொடுத்து கடுகு போலட்டிசை தொப்புளின் மேல், மேல்; வயிற்றில் வைத்துக் கட்டவும். இந்தப் பிரயோகங்களால் நிற்காவிட்டால் அபினில் ஒரு கிரெயினை உள்ளுக்குக் கொடுக்கவும். இரைக் குடலில் புளிப்புண்டாயிருக்கில் சுண்ணாம்புத் தண்ணீரை சுக்குக் குடிநீரில் சேர்த்துக் கொடுக்கவும்.

உபஸ்தத்தில் நின்று போகும் மேக வெள்ளை: உள்ளுக்கு படிக்காரத்தையாவது, மாயக்காயையாவது, அன்ன பேதியையாவது, வால் மிளகையாவது கொடுக்கவும். வெளியில் படிகாரத் தண்ணீரையாவது சுண்ணாம்புத் தண்ணீரையாவது இடவும்.
உபஸ்தத்தில் வலி: அபினையாவது குடத்தையாவது உள்ளுக்குக் கொடுக்கவும். வயிற்றில் சாதாரணமாய் உருண்டு நிணமாய் இருக்கும் . இரைக்கு பப்பாளிப் பாலையாவது, மாம்பருப்பையாவது, பூனைக் காலியையாவது கொடுக்கலாம். வீதியில் தட்டமாயும் மிகுந்த நீளமாயும் இருக்கும் இரைக்கு மாதள வேரின் கசாயத்தைக் கொடுக்கவும். இந்த அட்டவணையில் கண்டிருக்கும் இலக்கங்கள் இதிலுள்ள பிரிவுகளை குறிக்கின்றது.

சு.ச: 29.1.63.

****

முற்றும்.

****